1405

M. 1803. Vol. III—No. 10.

THE REGISTRAR OF
30 JUN 1926
MADRAS

லக்ஷ்மி

SARMA BROS.

சொந்தக்காரர்கள் :
கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

குஞ்சம் கட்டின

பட்டு லேஞ்சுகள்

நைஸான பட்டு, உடல் திக்கானது. பல வருடங்கள் உழைக்கும். பல வித மேகவர்ணக் கலர்கள், வெள்ளை நீலம், சந்தனக் கலர் முதலிய பல கலர்கள்.

5 மு × 40 இஞ்சு 1-க்கு ரூ. 10.

ஷை ஜரிகை கரைகள் போட்டது ரூ. 12 முதல் 14 வரை.

இமிட்டேஷன் ஸில்க் புடவைகள்

இந்தப் புடவைகளைப் பார்த்தால் அசல் பெங்களூர் பட்டுப் புடவைகளைப்போல் இருக்கும். கலருக்கு உத்திரவாதம். கலர் :—அரக்கு, மஞ்சள், கருப்பு, நீலம் முதலிய கலர்கள்.

18 மு × $2\frac{1}{2}$ அகலம் புடவை 1-க்கு ரூ. 12 முதல் 20.

எங்களிடம் சேலம், மதுரை, கோரநாடு, கராச்சி, காசி முதலிய ஊர்களிலிருந்து புதுமாதிரியான பல ரகங்கள் ஏராளமாய் வந்திருக்கின்றன. நீங்கள் வேறிடங்களுக்குப் போகுமுன் ஒரு முறை எங்களிடம் வந்து பாருங்கள்.

வலைப் பனியன்

போத்தானில்லாதது நைஸானது

பனியன் 1-க்கு ரூ. 1, 1-4, 1-8.

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ்,

287, சைனபஜார் ரோட்,

சென்னை.

பச்சை மோதிரத்தின் மர்மம்

The Mystery of the Emerald Ring

OFFICE OF THE REGISTRAR OF
30 JUN 1926
MADRAS

இது ஓர் அருமையான இனிய துப்பறியும் நாவல். இதைப் படிக்க ஆரம்பித்துவிட்டால் மனம் வேறெந்த ஜோலியையும் நாடாது, கதையின் போக்கு மிகவும் இனிமையாய் இருக்கும். இதைப் படிக்கும்போது சில இடங்களில் திடீரென சிரிப்பையும், ஆனந்தத்தையும் படிப்பவர்களுக்கு மனதில் ஓர்வித உற்சாகத்தையும் கொடுக்கும். சில இடங்களில் திடீரென மனங்கலங்கி ஓர் ஆச்சர்யத்தைக் கொடுத்து பலவித எண்ணங்களை யோசிக்கச் செய்யும். 224 பக்கங்களை உடையது.

இந்தப் புஸ்தகத்தை நாவல் பிரியர்கள் முதலில் வருத்திப் படித்துப் பார்த்து, மறுபடியும் ஒவ்வொருவர்களும் 5, 6 புஸ்தகங்கள் வருத்துகின்றார்கள்.

இதன் விலை ரூபாய் 1—0—0.

6 புஸ்தகங்கள் வருத்துபவர்களுக்கு ரூ. 1-க்கு அணா 4 கமிஷன் கொடுக்கப்படும். டசன் கணக்கில் வருத்துபவர்களுக்கு ரூ. 1-க்கு அணா 0–5–3 கமிஷன் கொடுக்கப்படும்.

உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

LAKSHMI BOOK DEPOT,

188, Govindappa Naick St.

MADRAS.

லோகோபகாரி.

தமிழ் நாட்டில் பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகை. முப்பத் திரண்டாவ தாண்டு இப்பொழுது நடக்கிறது. பரலி சு. நெல்லையப்ப பிள்ளை இதன் ஆசிரியர். தாங்கள் இதுவரை சந்தாதா ராகா விட்டால் உடனே எழுதுங்கள்.

வருட சந்தா ரூபா 4.

மாதிரிப் பிரதி இனம்.

'லோகோபகாரி'

பத்திரிகாலயம்,

கோமளேசன் பேட்டை,

சென்னை.

உங்கள் புத்தகசாலை பூர்த்தி யாகாது?

லக்ஷ்மி இதழ் 12-ம் காலிகோ பைண்டு செய்யப்பட்டு, கில்ட்டு எழுத்துடன் கூடிய 'லக்ஷ்மி' மலர் ஒன்றுக்கு ஆர்டர் செய்யுங்கள். 800 பக்கங்கள் 30 படங்கள் உள்ளது. புஸ்தகம் வைத்துக் கொள்வதற்கு அழகான பெட்டியுடன் விலை ரூ. 3.

தபாற் செலவு வேறு.
சொற்பக் காபிகளே கைவசமுள்ளன.
முந்துங்கள்.

நமது புதிய பிரசுரங்கள்

	ரூ.	அ.		ரூ.	அ.
காசி அல்லது புண்ணிய பூமி	0	12	நடராஜப்பத்து	0	2
மனோஹரி	0	8	பங்கஜம்	0	2
பரிமளா	1	0	குழில் மொழி	0	2
மணிவடக்களவு	0	4	கனவுப் பொடி	0	2
கந்தரலங்காரம்	0	4	எனது காங்கிரஸ் யாத்திரை	0	3
தாலாட்டுக்கோவை	0	3	வர்த்தக யுக்தி	0	12
பழமொழித்திரட்டு	0	3	கண்ணகியின் சாபம்	0	8

மானேஜர் "லக்ஷ்மி" ஆபீஸ், தபால் பெட்டி 99, சென்னை.

ஓர் வேண்டுகோள்

நேயர்களே !

வந்தனம், நாங்கள் சுமார் மூன்று வருட காலமாக நடத்திவரும் "லக்ஷ்மி புஸ்தகசாலை"யில் இப்பொழுது ஏராளமாக எல்லா விதத் தமிழ்ப் புஸ்தகங்களும் வைத்திருக்கிறோம். ஆகையால் தங்களுக்கு வேண்டிய தமிழ் நாடகப் புஸ்தகங்கள், நாவல்கள், இராஜீய நூல்கள், மத சம்பந்தமான புஸ்தகங்கள் இன்னும் வேண்டிய இதர புஸ்தகங்களுக்கும் எங்கள் புஸ்தக சாலைக்கே ஆர்டர் செய்யுங்கள்; உடனுக்குடன் அனுப்பிக் கொடுக்கிறோம்; வெளியூர்களிலுள்ள சந்தா நேயர்களும் மற்றுமுள்ள நேயர்களும் ஆர்டர் அனுப்பும் சமயம் தாங்கள் விரும்பும் தொகை அட்வான்ஸ் அனுப்பவேண்டும். ஆகையால் இது முதல் உள்நாடு, வெளிநாடுகளிலுள்ள நமது சந்தா நேயர்களும் மற்றுமுள்ள நேயர்களும் நமது லக்ஷ்மி புஸ்தக சாலைக்கே ஆர்டர் செய்வீர்களென்று நம்புகிறோம்.

புஸ்தகசாலை விலாசம் — மானேஜர்

லக்ஷ்மி புஸ்தகசாலை — லக்ஷ்மி ஆபீஸ்.

188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்.

அமெரிக்கன் சில்க் அங்கவஸ்திரம்.

தூய்ய வெள்ளை திக்கான பட்டு, குஞ்சம் அழகாகக் கட்டப்பட்டது.

5-மு. பட்டு லேஞ்சு 1-க்கு ரூ. **6-8-0**

உடனே எழுதுங்கள் !

லக்ஷ்மி சந்தாநேயர்களுக்கு வி. பி. சார்ஜ், பாக்கிங் சார்ஜ் இனம். ஆர்டர் அனுப்பும் சமயம் சந்தா நம்பர் குறித்து அனுப்பவேண்டும். இல்லாவிட்டால் வி. பி., பாக்கிங் சார்ஜ்கள் இனம் இல்லை.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால் பெட்டி 99

சென்னை.

ஓம்

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் :	பத்திராசிரியர் .
கே. எஸ். முத்தையா.	க. ச. சுந்தரம் பிள்ளை.

மலர் ௩. } அக்ஷய ௵ வைகாசி ௴ 1926 மே ௴ { இதழ் ௧.

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	... 475
2.	பட்டினத்தார்-திருவேகம்பமாலை	... 476
3.	தாய்மொழி பேணல் ...	... 477
4.	சிறுவனுக்குச் சில மொழிகள் ...	... 481
5.	வேம்பு	... 482
6.	உணவு தர்மம்	... 485
7.	மழைச்செழிப்பும் நாகரீகமும் ...	... 490
8.	பானுபாய்	... 495
9.	விதியின் பயனே பயன் ...	... 506
10.	தமிழின் பெருமையும் அதன் தற்கால நிலைமையும்	... 508
11.	முத்து பிறக்கு மிடங்கள் ...	... 513
12.	சந்தாநேயர்களுக்கு அறிவிப்பு ...	... 516
13.	மூன்று கனிகள்	... 517
14.	கடவுள் கோபமுள்ளவரா ...	... 519
15.	தலை ரோமம்	... 521

21038.
சென்னை 600 008

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாடுகளுக்கு வருடம் 1-க்கு
இந்தியா, பர்மா, சிலோன் ... } ரூ. 2 0

வெளி நாடுகளுக்கு வருடம் 1-க்கு
சிங்கப்பூர், பினுங்கு, மோரீஸ், } ரூ. 2 8

தனிப்பிரதி அணா 3.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு ஆங்கில மாத முடிவிலும் வெளியாகும் என்ற விஷயத்தை நேயர்கள் கவனிப்பார்களாக. பத்திரிகை கிடைக்காதவர்கள் மறுமாதம் 10உக்குள் சந்தா நம்பருடன் நமக்குத் தெரிவிக்கவேண்டும். அதற்கு மேல் கவனிக்கப்பட மாட்டாது.

மானேஜர்.

நமது லக்ஷ்மி கிடைக்கும் இடங்கள்

[தனிப் பிரதி அணா 3-வீதம் பெற்றுக் கொள்ளலாம். சந்தா நேயராகச் சேர விரும்புபவர்கள் கீழ்க் கண்ட 2,3,4,5,6, லக்கமிட்ட விலாசக்காரர்களிடமும் V.P. ஆர்டராவது, ரூ. 2. செலுத்தியாவது தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளலாம்]

1. மதராஸ் சென்டரல் ஸ்டேஷனிலும், மற்றுமுள்ள தென்னிந்தியா ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள ஹிக்கின்பாதம் (Higginbotham) புத்தக சாலைகள்.

2. K. S. முத்தையா அண்டு கம்பெனி, திருநெல்வேலி ஹைரோடு, திருநெல்வேலி.

3. S. சுப்பிரமணியம் செட்டியார், நெரியனைத் தோட்டம், நிவிட்டிக்கொலை, சிலோன்.

4. T. S. சேது மாதவ ராவ், ஆர்ய வைசிய காசுக்கார ஸரஸ்வதி சங்கம். 94, மேலச் செட்டித் தெரு, தெற்காவணி மூலவீதி, மதுரை.

5. C. லக்ஷ்மணன் 18, கோவிந்த முதலி தெரு, கஸ்பா வேலூர்.

6. S. K. சாமி, கமிஷன் எஜண்டு ELA. Po-(பர்மா.)

ஓம்:

லக்ஷ்மி துதி

செய்ய தண்டாமரைப் பூமேல் வசிக்கும்
திரு மடந்தாய்

வையக நீசர் கைப்பட்டதனா லுண்
மகிழ் கின்றையோ

மையணி வண்ணப் பெருமான்ற ணை
இவ் வம்பொழித் தியாம்

உய்ய நின் றண்ணருள் வாரிதி யாட்டற்
குளங் கொண்டிடே.

3L
N126·3·10

பட்டினத்துப் பிள்ளையார் பாடல்

திருவேகம்ப மாலை

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை; பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை; யிடைநடுவிற்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்றந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே!

அன்ன விசார மதுவே விசார மதுவொழிந்தாற்
சொன்ன விசாரந் தொலையா விசார நற் றோகையரைப்
பன்ன விசாரம் பலகால் விசார மிப்பாவி நெஞ்சுக்
கென்ன விசாரம்வைத் தாயிறை வா!கச்சி யேகம்பனே!

கல்லாப் பிழையுங், கருதாப் பிழையுங், கசிந்துருகி
நில்லாப் பிழையு, நினையாப் பிழையு, நின் னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந், துதியாப் பிழையுந்,தொ ழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே!

மாயநட் போரையு மாயா மலமெனு மாதரையும்,
வீயவிட் டோட்டி, வெளியே புறப்பட்டு, மெய்யருளாந்
தாயுடன் சென்று,பின் தாதையைக் கூடிப்,பின் தாயைமறந்
தேயும தேநிட்டை யென்று னெழிற்கச்சி யேகம்பனே!

வரிக்கோல வேல்விழி யாரனு ராக மயக்கிற்சென்று,
சரிக்கோது வே,னெழுத் தஞ்சுஞ் சொலேன்; தமியேனுடல்
நரிக்கோ? கழுகு பருந்தினுக் கோ? வெய்ய நாய்தனக்கோ?
எரிக்கோ விரையெதுக் கோவிறை வாகச்சி யேகம்பனே!

தாய் மொழி பேணல்

(கி. வா. ஜெகநாதன் எழுதியது.)

ஒரு நாட்டின் நாகரிக வளர்ச்சியில் பெருந் தொடர் புடையது மொழி வளர்ச்சியே யாம். தத் தம் நாட்டிற் குரிய மொழியின் விளக்கம் கண்டு இன் புறுவார் நாடு நலம் வேட்போர். மொழி வளர்ச்சி யுற்றதாயின், இலக்கிய ஆராய்ச்சி உறும். அஃது உறுங்கால் பொருட்சுவை பொலி யும். அப்பொழுது, மொழியின் பேரிலக்கிய வாச்சியங் களாகும் உயர்தகை சான்ற நன்னெறி உணரப்படும். அது காலை நாடு நன்னெறியோம்பிப் புன்னெறி களைந்து நல் வழி யுறும் என்க. நல் வழி யுறும் நாடு வளர்ச்சி யுற்றுப் பல் கும் வளத்ததாகும் என்பதில் ஐய மின்று. நிகழுங் காலத் தில் நாகரிகப் பான்மை யுற்ற தேயங்களை உற்று நோக்குழி ஆங்கே தாய் மொழி வளர்ச்சி காணலாம். செல்வ வளர்ச்சி யுற்றுவரும் மேனாட்டார் தத் தம் மொழியை வளப் படுத்துவதோ டமையாது யாண்டும் தம் மொழி பயில் வாரை மிகுதியும் வேட்கின்றனர். நம் நாட்டிலுங் கூடத் தேசிய முன்னேற்றத்திற் றலை சிறந்த வங்கமும் ஆந்திரமும் தத் தம் மொழி முன்னேற்றங் கருதி ஆற்றும் முயற்சிகள் அளவில. மொழி வளர்ச்சி யிலங்கும் நாட்டில் தேச பக்தி வளரும். அதனானே தேசத்தை முற்கோலப் பல்லோர் எழும்புவர். ஜப்பான் தனது உயர் நிலை எய்தும் நெறியில் தனது மொழி வளர்ச்சியை விடுக்க வில்லை என்பது ஆய்தற் பாற்று.

இத்தகைய உண்மையை நந்தம் தமிழ் நாடு எவ்வளவு அறிந்துளது? அந்தோ! தமிழ் நங்காய்! 'பொருப்பிலே பிறந்து தென்னன், புகழிலே கிடந்த' உன்றன் புகழ் யாண் டொளித்தது? தமிழர் எனப் பெயரிய மாந்தர் தமிழ் நயன் உணரார், தமிழ்க் கலை உணரார், தமிழ் நெறி உண

ரார். என்னே, காலம் இருந்தவாறு? தனிச் செம்மொழி களில் முதற் கண் வைத்தெண்ணப்படும் நந் தமிழ், செந் தமிழ், தன் மணங் கழன்று உறும் நிலை காணற் றகையதா? தமிழ்க்கெனத் தனிச் சுவை, தமிழ்க்கெனத் தனி யழகு, தமிழ் வீரம் ஆதியவை இன்னாள் கனவிலும் நினைத்த வாந் தன்மையில் உளவா? பண்டையோர் தண்டமிழோம் பினர், சங்கங் கண்டனர். ஆங்கே தங்கம் போலும் நூற் குவை குவித்தனர். இன்றோ மொழி பேணார் ஆகித் தம் அழ கழிந்து அழுங்குகின்றனர் தமிழர். தண்டமிழ்ச் செல்வியைப் புறக்கணித்த அன்றே புக்கது சோம்பல், போயது ஊக்கம். மிக்கது வறுமை, விட்டது செல்வம், என் செய்வது? மொழியின் பெருமை அறியாமல் வாளா கிடந்து வறுமை யுற்றோம். நாம் பெற்றது பொருள் வறு மை யொன்றோ? தமிழை மறந்தோம்; அப்பொழுதே மனோ கற்பனை போயது. மொழி வறுமை, சுவை வறுமை, இலக்கிய வறுமை, இன்ப வறுமை ஆதிய வெல்லாம் நம் மைச் சூழ்ந்தன. ஆழ்ந்தனம் அடரிருட் பிழம்பில்.

திரு வருட்டிறத்தால், நம் நாட்டில் யாண்டும் கிளம்பும் ஒரு புதிய சக்தியால் தமிழ் நாடு சிறிது கண் விழித்து மருண்ட பார்வையில் நோக்குகின்றது. பண்டைத் தமிழர் உயர்வுடையர், தமிழர் வீரம் தனிச் சிறப்புடைத்து என்ப தை உணர்ந்து வருகிறோம்.

'செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே!

என்ற கவியின் ஆவேசம் இன்பம் ஊட்டுகிறது. செந்தமிழ் நாட்டில் தொண்டர் பலர் தாய் மொழி யோம்ப முற்பட் டுளர் என்பது கண்டு களி யுறுகின்றோம். இஞ்ஞான்று ஒரு பேரியக்கம், மொழி வளர்ச்சிக்கென ஒருமித்த மனத் தினரால் தொடங்கப் படுதல் வேண்டும். செந்தமிழோம்பு வார் கோடற் பாலதாய சில நெறிகள் ஈண்டு பொறித்தல் அமை வுடைத்து.

முதலில், மொழி வளர்ச்சிக்கு உரிய துறைகளில் உழைக்கப் பெருந் தொண்டர் பலர் குழுமிப் பல்லாற்றானும் ஊழியம் புரிய ஒருப்படல் வேண்டும்.

பேரவைகள் பல அமைத்துத் தமிழ் வளர்ச்சிக்குறு துணை யாளர் யாவரையும் கூட்டுதல் வேண்டும். நாட்டுப்

தாய் மொழி பேணல்

பெருங் கழகம் ஒன் றமைத்து அதன் கிளைகள் பல ஆங் காங்கே நிறுவுதல் நலன். பெரும் கழகம் சில இன்றி யமை யாத தொண்டினை மேற் போட்டுக் கொண் டுழைத்தல் வேண்டும். தமிழ் நாட்டு ஜில்லாக்கள் ஒவ் வொன்றிலும் உள்ள மொழி வல்லார் இப் பெருங் கழகத்திற் குறுப்பின ராதல் வேண்டும். கிளைக் கழகங்கள் அடிக்கடி கூடி அவ் வப்போது வேண்டும் பணியாற்ற முன்வரல் வேண்டும்.

இனி இக் கழகங்கள் எத்தகைய பணிகள் ஆற்றல் வேண்டும் என்று ஆய்வோம்.

நந்தம் நாட்டில் பண்டைத் தமிழ் நூல்களில் பல இன்னும் வெளி வராதன பல உள. அவைகளை வெளிப்படுத் தல் ஒரு பிரிவினர் செய்தல் ஆம்.

மற்றும், இக்கால அறிஞர் எழுதும் சுவடிகளைக் கண் காணிக்கும் பிரிவு ஒன்றும் இருத்தல் வேண்டும்.

உரை நடை நூல்களை ஆராய்ந்து மொழி வளர்ச்சிக்குத் துணை கூறும் இனிய நூல்களைத் தேர்ந்து நாட்டினர்க் கவைகளைச் சிறப்பித்துக் காட்டல், முதலியவைகளும் வேண்டும். புதினங்கள் பொறிப்பார் பலரையும் கூட்டி அவரிடையே பொது முறை, பொது வழக்கு ஆதியன கோலி அவர் தம் ஒற்றுமையை மிகுதிப்படுத்தல் வேண்டும். திருமுறைகள், பிரபந்தங்கள் ஆதியவைகளைப் பிழை யின்றி வெளிப்படுத்தி இலவசமாய் எல்லாரிடமும் பரப்புதல் நன்று. இது போழ்து திருவாசகத்தை இரண்டணைப் பதிப்பு ஆக்கி நலம் புரியும் சென்னைச் சைவ பரிபாலன சபையாரின் முயற்சி போற்றற் பாலது.

அன்றியும் ஆங்காங்கே தனித் தமிழ்ப் பள்ளிகள் கண்டு கழகத்தின் நன் மதிப்புப் பெற்ற ஆசிரியர்கள் அமர்த் தல் வேண்டும். சொற்பொழி வாளர்களை இடையீ டில்லாது எங்கும் சென்று தமிழ் ஓம்பல் பற்றிச் சொன்மாரி யாற்று மாறு செய்தல் வேண்டும். பெரிய ஊர்களில் நூல் நிலை யங்கள் அமைத்துப் பொதுமக்கள் அடிக்கடி நூற் சுவை உணருமாறு செய்தல் வேண்டும். இன்னும் எவ்வளவோ வழி யுரைக்கலாம். அந் நெறி பற்றி மொழித் தொண்டாற் றப் பெரும் பொருள் வேண்டும். பொருள் மிக ஈய இற்றை ஞான்று நந்தமிழ் நாடு தக்கதா யில்லை. ஆயினும் எட்டு

ணையாலும் முயன்று அறிவோர் அரும் மொழிக்கு ஆக்கம் தேடுதல் அவர் தம் கடன். விலைமகட்கும், பட்டம் ஆதிய இடம்ப வாழ்வின் உறுப்புகளுக்கும் நீள்கைப் பெருமக்க ளாய பொருளாளர் சிறிதே தமிழ்க் கிரங்கி உதவலாகும். உலகினர்க்கு நல்லுபதேசம் புரிவான் போதரும், பரதேசி கள், சுவாமிகள், ஆதியோர் இத் துறையில் உழைக்க முன் வரலாம். வீணே வாழ் நாளைச் சோம்பியும், வாய் வேதாந்தம் பேசியும் கழிக்காது தமிழ்க்கெனத் தொண் டியற்றில் தமிழ்த் தாய் எழுவாள். தத்தம் வீட்டில் செல்லரிக்குமாறு விடப்பட்ட தமிழ் நூல்களை ஒருங்கு சேரத் திரட்டி நூல் நிலையம் அமைத்துப் பல்லோர் கூட்டுறவுடன் நலம் பயக்க லாம். 'மனம் இருப்பின் வழி உண்டு.'

தமிழ்மொழி வளர்ச்சி பெறுவது கடிய தொன்றும். ஆயினும் மொழிச் சிறப்பின்றி விடுதலை எது? இன்பம் எது? 'சும்மா கிடைக்குமா சோணசலன் பாதம்.' உடல்-பொருள் ஆவி மூன்றையும் ஒருங்கே ஒப்படைக்கும் ஆற்றலுடைத் தொண்டர்களால் தான் நாடு நலம் உறும். தொண்டர் பல்கிப் பெரு முழக்கம் செய்யுங்காலம் கிட்டி யது. உலகில், ஆங்காங்கே மொழி வளர்ச்சி வேண்டுளர் யாக்கு புரியும் ஊழியம் பல. ஆந்திர நாடு பல்கலைக் கழகம் ஒன்று நிறுவ ஏற்பாடுகள் நடாத்துகின்றது. வங்கமொழி பிறமொழியிலிருந்தும் பல மணிகளைத் தன்வயின் கோவைப் படுத்துகிறது. ஆங்கிலம் எங்கும் கமழ்ந்து எதையும் தழுவி வளர்கின்றது. இந் நிலையில் தண்டமிழே! நினக்குத் தானோ இத் துரதிர்ஷ்டம். தமிழரே! எழுமின். தண்டமி ழோங்கத் தொண்டினை யாற்றுமின்! விழிமின், கருதிய தெய்தும் வரை உழைமின். எல்லாம் வல்ல இறைவன் அருள் செய்வானாக.

சிறுவனுக்குச் சில மொழிகள்

நா. ரு. கோபாலய்யங்கார்.

குழந்தாய்! உன் மனம் சிற்ரேடைத் தெளிநீர் போலும், மாசற்ற ஸ்படிகம்போலும் தெளிந்துள்ளது: கண்டதைக் கண்டவாறே பசுமரத்தறைந்த ஆணி யெனப் பதிவுறுஞ் சக்தி யுற்றது: மொழிந்ததை மொழிந்தவாறே கூறுங் கிளிப்பிள்ளைக்குச் சமானமானது.

பொழுது புலர்ந்த நேரம் விழித் தெழுந்து காலைக் கடனைச் சரிவரச் செய். அழுக்குத் தேய்த்துக் குளிர்ந்த நீரில் குளிப்பது தான் உடம்பிற்கு மிகவும் சுகத்தைக் கொடுப்பது என்று நல்லோர் கூறுகின்றனர். நீ ஏழைக் குடும்பத்தில் பிறந்திருந்தால் கட்டுந் துணி கந்தை யென்றும் குடிக்கும் பொருள் கூழ் என்ருவது எண்ணி வருந்தாதே. உண்ணும் உணவும் உடுக்கும் உடையும் எவனையும் தாழ்மைப் படுத்தாது. ஆகையால் நீ கொள்ளுங் குணங்களே உன்னை மேன்மைப் படுத்தும். கிடைத்ததைக்கொண்டு திருப்தி யுறுவதே மேன்மை. அண்டை அயலார் பட்டுத்துணி கட்டிப் பீதாம்பர மேலுடுத்தித் தங்கக் கிண்ணத்தில் பாலன்னம் புசிப்பதை நினைத்து வருத்தப்பட்டால் அது உன்னைப் பொருமைக்காரனுக்கும், எட்டாத கனிக்குக் கொட்டாவி விடுவதாக உன்னைப் பலர் ஏளனம் செய்வார்கள்.

மேலும், பெற்ருேர், குரு, இவர்கள்தான் தெய்வத்திற்கீடானவர்கள் என்று எண்ணி மற்ருேரைத் தூஷித்து அவமதிக்காதே. நீ கண்டு பழகும் எல்லாரிடத்தும் மட்டும் மரியாதையும் வைத்திடக் கண்டோர் "அப்பா! இக் குழந்தை என்ன அடக்கம்; என்ன பொறுமை" என்று புகழுமாறு நடந்துகொள். கன்னெஞ்சமும் இளகி உறுகிவரும் வண்ணம் அனைவருக்கும் அன்பும் பணிவும் கொள்வாயாகில் உன்னை யாதரிக்க பலர் முன் வருவார்கள். ஆத்திரமும் படபடப்பும் உன்னிடம் குடிகொள்ளா திருக்கட்டும். ஏனெனில் இவைகள் நிவாஸத்திலே தாபமும் கோபமும் தாமே முளைக்கும். ஆத்திரம் விளைவிக்கும் ஆபத்துகள் அநேகம். சண்டையும் சச்சரவும் தானே உண்டாகும். பதறிய கருமம் சிதறி உன்னைப் பங்கப் படுத்தும். ஆனல், நிதானத்துண்டான அன்போ பேரின்பத்தை விளைக்கும். அன்பாகப் பேசிப், பிறரைச் சந்தோஷிக்கச் செய்யும் சமயத்திலும் உண்மை பேசத் தவருதே. பேசுவதுமட்டுமன்றி எண்ணமும் செய்கையும் ஒன்றையே—நல்லதையே—குறிக்கட்டும். அவ்விதம் நாடி நிற்பதையே பெரியோர் திரிகரண சுத்தி

யென்று கூறுவர். அவ்வித மனம் வாக்கு காயங்களின் மூலம் மனமேயாக அதனை எவ்விடத்தும் எப்பொழுதும் தூய்மை யாகவே வைத்திடு. சட்டியிலுள்ளது தான் அகப்பையில் வருவது போல உன் செய்கை யாவும் நற்குணம் பொருந்தியதாகவும் இருக்கும். அத்தகைய செய்கைதனைத் துவக்கு முன் 'நான்' என்ற அகம்பாவத்தை விடுத்துக் கடவுளுதவியால் என்று மேற்போட்டுப் பாடுபடு. சாமியுனக்கு செய்வகை காட்டுமே யன்றி எடுத்தூட்டா தென்பதை நன்ருய் நினைத்து உன்னுலான மட்டும் உழைக்க வேண்டும். பெரும்பாலும் உனது எண்ணம் துவக்கத்திலேயே நிறைவேறலாம்; ஒருக்கால் தவறினதைக் கண்டு தெய்வத்தை யாவது, உன் துரதிஷ்டத்தையாவது நொந்துகொள்ளாதே. முக்காலும் முயல் என்பதே சிறந்த வசனம். உன தூழ்வினைப் பயன்படி பொன்னுக்குப் பொன்னும் மண்ணுக்கு மண்ணும் விளையுமென்பதை மறக்காதே. இட்டார்க் கிட்டபடி கிட்டியதை யுன்னித் தான தருமமும் தவறுது செய்வாயாகில் கலைவல்லோனே யன்றிப் பின் வாழ்வில் பேரும் புகழும் பெற்று பெருவாழ்வு வாழ்வா யென்பது கண்ண னருள்.

வேம்பு

அ. ச. அருணுசல ரெட்டியார்.

வேம்புக்கு—வேப்ப மரம். பத்தினி மரம், கணி, திமிசு என்று பல பெயர்க ளுள. வேங்கை மரத்தின் பெயரையும் இதற்கு இட்டு வேங்கை என்று அழைப்பர். வட மொழியில் வேம்பை "நிம்பம்" என்பர்.

இது நாட்டு வேம் பென்றும் மலை வேம் பென்றும் இரு வகைப் படும். நாட்டு வேம்பின் இலை சிறிது வெளுப்பாய்த் தெரியும். மலை வேம்பின் இலை கரியதா யிருக்கும். மலை வேம்பை மருந்துக்கு உபயோகிப்பதில்லை. நாட்டு வேம்பு கரி வேம்பு அல்லது கரு வேம்பு என்றும், சிவனர் வேம்பு என்றும் இரு வகைப்படும். இவை யிரண்டும் மருந்துக் குதவும். கறி வேப்பிலை கறி வகை தாளிதத் திற்கும், மோரிற் கரைத்தற்கும், அதன் காம்பு சில நோய்களுக்கு மருந்தாகவும் உதவும். இது உணவுக்குச் சுவை தருவதோடு உடலுக்கும் சுகங் கொடுக்கின்றது. இவை யல்லாமல் நில வேம் பென்று மற்ருென் றுள்ளது. அது நிலத்திற் படருஞ் செடியாத லாலும் வேம்பின் குணம் அதற் கிருப்பதாலும் அப்பெயர் அதற்கு வந்த தென்பர்.

வேம்பு

வேம்பின் இலை, பூ, பழம், விதை, எண்ணெய், புண்ணாக்கு, பட்டை, வேர், பிசின், மரம், இவை யனைத்தையும் பயன் படுத்த லாம். இவை யனைத்தும் மருந்தின் குணம் படைத்தவை.

வேம்பின் இலையை அம்மை கண்டவர்களின் படுக்கையில் போட் டிருப்பதால் அம்மைக் கொப்புளங்களிலுள்ள பூச்சிகள் அழிந்து விடும். இது பற்றியே வீட்டின் வரயில்களிலும் தாழ்வாரங்களிலும் வேப்பிலையைக் கட்டும் வழக்கம் இருந்து வருகிறது. புத்தகங்கள் முதலிய வற்றைப் பூச்சிகள் நாசஞ் செய்யாமல் காப்பதற்கு வேம் பின் இலை மிகவும் உபயோகமாக இருக்கிறது. குழந்தை பிறந்த வீட்டில் வேம்பின் இலைகளைப் போட்டு வைப்பதால் அங்குள்ள நச்சுக் காற்றினு லுண்டாகும் வியாதி நீங்கும். குழந்தைகளுக்கும் மற்றவர்களுக்கும் வேம்பின் காற்றினுல் மிகுந்த நன்மை யுண்டு. எண்ணெய் தேய்த்து நீர்க் கொள்ளாதபடி சூடு தரும் வேம்பின் தளிரை அப்புதல் நன்று. வேம்பின் இளந் தளிர்களைத் தின்றால் சிற்றின்ப ஆசை நீங்கு மென்று ஞானிகள் அதனைக் கொள்வதுண்டு. வேப்பம் இலையை உலரவைத்துப் பொடிசெய்து நெருப்பி லிட்டால் அதினின்று எழும் புகை கொசு முதலியவற்றைத் துரத்தி விடும். வேப்பிலைச் சாம்பலினுலும் வேப்பங் குச்சியினுலும் பல் துலக்குவதி னுல் பல் கெட்டியாவதுடன் வாயிலுண்டாகின்ற கெட்ட நாற்ற மும் நீங்குகின்றது. வேம்பின் தழைகளை நிலங்களுக்கு எருவாகவும் இடுகிறுர்கள். வேம்பினின் றிறக்கிய நீர் கொடுங் குஷ்டத்திற்கும் அழுகு புண்ணிற்கும் மேலான மருந் தென்பர்.

வேம்பம் பூவைப் பச்சடி செய்தும், குழம்பு வைத்தும், துவை யல் செய்தும் நெய்யில் வதக்கி உணவொடு கலந்தும் உட்கொள்வ தனுல் அது வாயுவைக் கலைக்குமென்பர்.

வேம்பின் பழத்தை ஏழைகள் பொறுக்கி யுண்பார்கள். காக்கை களும் அப்பழத்தை மிக விருப்பமா யுண்கின்றன. "வேம் பன்றே காக்கை விரும்புங் கனி" என்றனர் சிவப்பிரகாசரும்.

வேப்பம் விதை—விஷம், சன்னி, வாதம் போக்கும். இவ் விதைகளிலிருந்து இறக்கப்படும் எண்ணெய் பல நோய்களுக்கும் மிகவும் உபயோகப்படுகின்றது. இழுப்பு நோயுள்ளவர்களுக்கு வெள்ளைப்பூண்டு, வேலை இரண்டையும் நசுக்கி வேப்பெண்ணெ யிலிட்டு எரித்துத் தடவினுல் குணமாகும். சன்னி, வாதம், பித் தம், கிருமி இவைகளையும் வேப்பெண்ணெய் போக்கும். இவ் வெண்ணெயால் விளக்கெரிப்பதால் அம்மை, மண்ணன் முதலிய தொத்து வியாதிகளைத் தடுக்கலா மென்பது வைத்தியர்கள் கருத்து. இதற்குப் பேய் பிசாசுகளைத் தடுக்கும் சக்தி யுண்டென்பர். ஏழை கள் இதைத் தேய்த்துக் குளிப்பார்கள். இதை வழக்கமாக உப

யோகிப்பவர்களுக்குக் கொள்ளை (பிளேக்) நோய் வருவதில்லையாம். "வேப்பெண்ணெய் விற்ற காசு கசக்குமோ?" என்ற பழமொழியும் உண்டு. நல் வழியில் பொருள் தேடுவதே சிறந்ததென்பது இதன் கருத்து. எவ்விதமெனில் வேப்பெண்ணெய் கசப்புள்ளதாயிருந்தாலும் அது மக்கள் நன்மைக்கு உதவுவதால் அதை விற்றுச் சம்பாதிக்கும் பணம் நல்வழியில் வந்தாகிறது. கசந்த பொருளானமை பற்றி அதை விற்பதால் வரும் செல்வம் தீ நெறியில் ஈட்டியதாகாது. கள் முதலிய மயக்கப் பொருள்கள் மதுரம் பொருந்தியனவா யிருப்பினும் அதனால் மக்களுக்கு எண்ணிறந்த கேடுகள் நேரிடுவதால் அதனால் வரும் செல்வம் தீ நெறியில் வந்ததாகும். இது பற்றியே "கள் விற்றுக் கலப்பணம் சம்பாதிப்பதினும் கற்பூரம் விற்றுக் காற்பணம் சம்பாதிப்பதே மேல்" என்ற பழமொழியும் எழுந்தது.

வேப்பம் புண்ணாக்கைக் கொளுத்தி மிகுந்த சன்னி கண்டவர்களுக்கு அதன் புகையைக் காட்டினால் குளிர் குறையும். இன்னும் இப்புண்ணாக்கை நிலங்களுக்கு எருவாகவும் உபயோகப்படுத்தலாம்.

வேப்பம் பட்டையிலிருந்து இறக்கப்படும் தைலத்திற்குக் கிருமி (சிறு பூச்சி)களை அழிக்கும் சக்தி யுண்டு. உடலிலுள்ள சதையை அழுக விடாமலும் காக்கிறது. வேப்பம் பட்டைக் கியாழத்தை உடலில் பூசினால் கிருமிகள் பற்றாது. கொள்ளை நோய் உண்டாகுங் காலங்களில் வேப்பம் பட்டையிலிருந்து இறக்கிய சாற்றை உபயோகிப்பதுண்டு. வெப்புக் கசா வென்று ஒரு மருந்தும் அதன் பட்டையிலிருந்து செய்வார்களாம்.

வேப்பம் வேரையும் மருந்துக்கு உபயோகிக்கிறார்கள். அதன் வேரில் ஒரு துண்டை யெடுத்து உலையில் அரிசியோடு சேர்த்துப் போட்டு விட்டால் அவ்வுலையிலுள்ள அரிசி வேகாதாம். பிறகு அவ்வேரை எடுத் தெறிந்துவிட்டு அவ்வரிசியை நன்றாகக் கழுவிப் போட்டால் வெந்துவிடுமாம். வேம்பின் பிசினை ஒட்டும் பசையாக உபயோகிக்கிறார்கள்.

வேம்பின் உத்தரங்களை வீடுகளுக்குப் போடுவது நலம். எவ்வளவு கெட்டியான மரங்களைப் போட்டிருப்பினும் வேப்பம் உத்தரம் ஒன்றாவது இருப்பது நலம்.

வேப்பமர நிழலும், அம்மரத்தின் மீது வீசி வருங்காற்றும் உடலுக்கு மிக்க சுகந் தரக் கூடியது. இதனாலேயே "வீட்டடியினும் வேம்படி சேல்" என்பர் நம் நாட்டார். ஒவ்வொரு வீட்டருகிலும் நாம் வேப்ப மரத்தை வளர்த்து வருவோமானால் நல்ல சுகம் பெறலாம். வேப்ப மரங்கள் அதிகமாயுள்ள இடங்களில் சுர நோய்

வருவதே யில்லை யென்பது ஐரோப்பியர்களின் கருத்து. முற் காலத்தில் நம் நாட்டில் வீடுகள் தோறும் வேப்ப மரங்கள் பயி ராக்குவதும் அவற்றினடியில் குரவை பாடி யாடுதலும் வழக்கமென நமது நூல்கள் கூறும். வேம்பிற்கு இவ்வளவு அரிய சக்தி யிருப்ப தனாலேயே இதைத் தெய்வத்திற்கு உகந்த மர மென்கிறார்கள். முற் காலத்தில் அரசர்களுங்கூட இதன் பூவை மாலையாக அணிந்து அதற்குப் பெருமை யளித்துத் தாமும் இன்ப மடைந்து வந்தனர். வேம்பு மிகவும் கசப்பு உள்ள தெனினும் அதன் அரிய குணம் பற்றி அதை எவரும் வெறுக்காது கொள்வர். "விரும்பினால் வேம்புங் கரும்பாகும்" என்று பழமொழியும் வழங்குகிறது.

உணவு தர்மம்

"மருந்தென வேண்டாவாம் யாக்கை கருந்திய
தற்றது போற்றி உணின்"

உணவு தர்மங்களை யோக வித்தியார்த்திகளே தங்க ளிஷ்டப் படி திட்டப்படுத்திக்கொள்ள விடுகிறோம். நமது அனுபவத்தில் சில உணவுகள் வெகு நல்ல பிரயோஜனத்தைத் தந்திருப்பதால் அதைச் சிறப்பிக்கிறோம். ஆனால் வெகு பரம்பரையாய் ஒருவித உணவுக்குப் பழக்கப்பட்டிருக்கும் அவர்களுக்கு ஒரே நாளில் தங்க ளுடைய உணவுகளை மாற்றிக்கொள்ளல் அசாத்திய மென்பதும் யா மறிவோம். மனிதன் இதரர்களுடைய பிடிவாத உபதேசங் களுக்கு வசப்படாமல் தனது அனுபவத்தையும், தினே தினே விருத்தியாய் வரும் புத்தியையும், உணவு விஷயத்தில் உபயோகித் துச் சரியான மார்க்கம் செல்லவேண்டு மென்பது மாத்திரம் நமது விருப்பம். யோகிகள் அல்லது அறிவாளிகள் சாகபக்ஷணமே செய்வதின் கருத்து முக்கியமாய் ஆரோக்கியத்தின் விருப்பமாகும். இரண்டாவதாக மாம்ச பக்ஷணத்திலுள்ள அருவருப்பு. யோக வித்தியார்த்திகள், புளிக்கவையாத கோதுமை அல்லது அரிசி மாவால் செய்த அடை, பழங்கள், வித்துகள், வித்துகளிலிருந்து உண்டாகும் நெய் (ஆலிவ் ஆயில்) இவைகளையே விசேஷமாய் விரும்புகிறார்கள். யோகிகள் இருப்பிடத்தை விட்டு வெளியில் சென்றால் யாத்திரையிலிருக்கும் தங்களுக்கு விருந்து செய்கிறவர் களுக்கு யாதொரு கஷ்டத்தையுங் கொடாமலிருக்கும் பொருட்டு அதிக சுலபமாய்த் தங்கள் வழக்கங்களை மாற்றிக்கொண்டு, அங்கே

கிடைக்கும் ஆகாரங்களை உணவுக் கிரமத்தில் உண்டு சரிப்படுத்திக் கொள்ளுகிறபடியால் ஜீரணக்கருவிகளே சரீர ஆரோக்கியத்திற்கு வேண்டிய ஜாக்கிரதையை எடுத்துக்கொள்ளும்படி செய்கிறார்கள். அதனால் அவர்கள் தங்களுடைய பழக்கத்திலிருந்து மாறும் உணவுகளை அந்தப் புது விடங்களில் ஏற்றுக்கொள்ளத் தயங்குவதில்லை. யோக உணவு தர்மத்தை அனுசரிப்பவர்கள் அக்காலத்தில் உணவாக உபயோகிக்கும் வஸ்துக்கள் அதிக அஜீரண குணமுடையனவாயிருப்பினும் அவைகளைப் பாதகமில்லாமல் அங்கீகரித்துத் தக்கபடி புசித்து ஜீரணித்துக்கொள்வார்கள்.

2. யாத்திரையிலிருக்கும் யோக வித்தியார்த்திகளைக் கருதி இந்தப் பாடம் சொல்லப்படுகிறது. நமது இஷ்டப்படி சில விதிகளை ஏற்படுத்தி அவைகளின்படி அவர்கள் நடக்கவேண்டுமென்று நினைப்பது தகுந்த தல்லவென்று யாம் முன்னமே அறிவோம். திடீரென்று ஒருவரைக் கட்டாயமாய் உணவுக் கிரமங்களை மாற்றிக்கொள்ள நிர்ப்பந்தப்படுத்துவதைவிட அவரே சொந்த புத்தியைக் கொண்டு கிரமேண இயற்கையாகிய உணவு தர்மத்தினுடைய பிரயோஜனத்தை அறிந்து அந்த மார்க்கத்தில் செல்லும்படி செய்வதே நமது நோக்கம். ஜன்மம் முதல் மாமிசம் புசித்துப் பழகினவர்கள் சாகபக்ஷணிகளாகத் திரும்புவது கஷ்டம். அதே மாதிரி தம் வாழ்நாள் முழுதும் உணவைச் சமையல்செய்து உண்டவருக்கு இயற்கை வஸ்துக்களை, சமையல் செய்யாமல் உண்ணச் செய்வதும் கஷ்டம். நானாவிதமான இயற்கை நிலைமையிலுள்ள உணவுகளைச் சாப்பிடப் பழக வேண்டும். அப்படிச் செய்து வந்தால் மாம்சபக்ஷணத்தில் அபேக்ஷையும் சமையல் செய்த பதார்த்தங்களில் விருப்பமும் தன்னடையே விட்டுப்போம். அப்படிப்பட்ட முயற்சிகளில் நன்றாய் ஊக்கத்துடன் யாவரும் பாடுபட வேண்டுமென்பதே எமது அபிப்பிராயம். உப்பு, புளி, மிளகாய், சர்க்கரை, கடுகு, மஞ்சள், காயம், தனியா, வெந்தயம், மிளகு, சீரகம், வெங்காயம், வெள்ளைப்பூண்டு, முதலான வஸ்துக்களைத் தனித் தனியாகச் சிலநாள் பசிகொண்ட அளவு உண்டு பரிசோதித்து வந்தால் இவைகளெல்லாம் சரீர ஆரோக்கியத்திற்கு விரோதமான உணவுகள்என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் ஸ்பஷ்டமாய் விளங்கும். கார்ய மனதை நன்றாய் நம்பி இடைவிடாமல் அதன் விருப்பத்தைக் கவனித்து அதன்படி நடந்து வந்தால் கிரமமான உணவைத் தேடும்படி கார்ய மனம் நமக்கு அறிவிக்கும். இதே வழியில் யோகிகள் போஷணத்தையும் வீரியத்தையும் கொடுக்கத் தக்க உணவுப் பதார்த்தங்களைத் தெரிந்தெடுக்கிறார்கள். பழக்கத்தின் கொடுமையால் கட்டுப்பட்டு வேறு விதமாக மாற்றக் கூடாத கெட்ட உணவு தர்மங்களுக்கு அடிமைப்படாமல் கார்ய மனதை நம்பி அந்த மனச்சாக்ஷி உபதேசப்படி நடக்கவேண்டும். புத்தி

யுடையவன் விடும்படியான விஷயத்தை இந்தப்பாடத்தில் சொல்லு கிறோம். ஆனாலும் இந்த விஷயத்தை ஒரு கட்டளையாக நினை யாமல் ஆலோசனையாக மாத்திரம் மனம் அங்கீகரித்தால் அதுவே எமது கஷ்டத்திற்குத் தகுந்த கைம்மாறாகக் கருதுவோம்.

3. மாமிச பக்ஷணத்தை விட்டுவிடும்படியாக ஒவ்வொருவர் புத்தியிலும் ஓர் எண்ணம் தானே உண்டாக வேண்டுமே யொழிய வெளி உபதேசத்தினால் உண்டாகக் கூடியதல்ல. ஒரு வேளை நிர்ப்பந்தப்படுத்தி ஒருவித உணவு கிரமத்திற்கு வரும்படி செய்வது, அல்லது பழக்கமாயிருக்கிற கிரமத்திலிருந்து விலகும்படி செய்வது, கோ மாமிச பக்ஷணியை அப்பழக்கத்திலிருந்து நிவர்த்தியாக நிர்ப் பந்தப்படுத்துவது, ஆகிய இவைகளெல்லாம் ஒருவருடைய சுகத்தி லிருந்து நீக்கி அவருக்கு வருத்தமுண்டாக்கினால் எந்தப் பாவமோ அத்தனை பாவமாகும். மனிதன் தனது பரிணாம பதவியில் காலக் கிரமத்தில் நுட்பமாய் ஊகித்துப் பார்த்தால் மாமிச பட்சணத்தைத் தானே தள்ளிவிடுவான். அப்படி விட்டுவிடுகிற காலம் வருமுன்னே அவனை நிர்ப்பந்திப்பதால் யாதொரு பயனும் உண்டாகாது. இம் மாதிரி செய்கை எமது கொள்கைக்கு விரோதமென்று தெரிந்தும் மாம்ச பக்ஷணத்தை விடச்சொன்ன இச்சொற்கள் அனுபவத்தில் உண்மை என்று ஏற்படும்.

4. விதம் விதமான உணவுப் பதார்த்தங்களின் பயன்களைப் பற்றி யோகவிர்த்தியார்த்திகள் அறிய விரும்பினால் நவீனர்களால் எழுதப்பட்டிருக்கும் பதார்த்த நூல்களையும் படித்துப் பார்க்கலாம். ஆனால் அந்த நூலாசிரியரின் பிடிவாதமான சித்தாந்தத்தை மூடத் தனமாய் அனுசரிக்காமல் இருக்கக் கேட்டுக்கொள்கிறோம். அந்தப் புஸ்தகங்களில் நமது விருந்துச் சாலைக்குவரும் உணவுகளின் குண குணங்களினுடைய தாரதம்யத்தைப் படிக்க சந்தோஷமாயும் விஷயக்கிராஹ்யமாயும் இருக்கும். இவ்வறிவு படித்தவர்களை சிரம மான உணவு தர்மத்தில் கொண்டுவிடும். எவருக்காகிலும் கிடைக் கும் அனுபவம் தமது சொந்த அனுபவத்தில் கிடைத்த பயனாய் இருக்கவேண்டுமே யொழிய இதரர்களுடைய வினோத அனுபவச் சொல்லை நம்பி அப்படிக் கேள்வியினால் தெரிந்துகொண்டதாக இருந்தால் அது பிரயோசனப்படாததுடன் சுகமும் தராது. நமது முன்னோர்கள் மாமிசத்தை அதிகமாய் உண்டார்களாவென்றும், பழங்கள் ரொட்டி அல்லது அடை முதலான உணவுகளைச் சாப் பிட்டுக் காலங்கழிக்கவில்லையா வென்றும் கவனிக்கக் கோருகிறோம். பழங்களையும் அடைகளையும் விட்டு மாமிச வகைகளையும், புளி யோரை சர்க்கரைப் பொங்கல் முதலான பலவித ருசியுள்ள உணவு களையும் உண்டதினால் எப்படிப்பட்ட சுகங்களைக் கண்டார்களென் பதையும் கவனிக்கவேண்டும். ருசிகரமான பட்சியங்களாயிருக்கிற

அப்பம், இட்டிலி, லட்டு முதலியன போன்ற செயற்கை உணவு களையும், பசுவின் நெய் அதிகம் சேர்ந்த பதார்த்தங்களையும் அதிக மாமிஸம் முக்கியமாய்ப் பன்றி மாமிஸம் இவைகளைப்போன்ற ஆகார வகைகளையும் ஆகாரமாக உட்கொள்ளாமல் கட்டாயமாய் விட்டு விட வேண்டும். அனேகவித உணவுகளுக்கு ஆசைப்படாமல் சுத் தான்ன உணவையே சரீரத்துக்கு ஆரோக்கியமானதென்று அறிய வேண்டும். அனேக வித ருசிகள் சேர்ந்த (கதம்பம்) செயற்கை அன்னத்தை விலக்கவேண்டும். தோசை, அப்பம் போன்ற மாப் பண்டங்களைக் குறைவாக உண்ணவேண்டும். அதிக உஷ்ணமா யிருக்கும் நிலையில் அதாவது சரீரத்தில் இரத்த உஷ்ணத்துக்கு அதிகமாயிருக்கும் எந்த உணவையும் உண்ணக்கூடாது. சில சமயங்களில் சரீரம் உணவை விரும்பாத விஷயத்தை அறிந்தும் கொத்தமல்லிப் பச்சடி, ஊறுகாய் போன்றவைகளைத் தொட்டுக் கொண்டு அவைகளின் உதவியால் உணவைப் பலாத்காரமாய் வயிற்றில் உள்ளே தள்ளி வயிற்றை நிறைத்து அதை அதிக வேலையைச் செய்யும்படி நிர்ப்பந்தப் படுத்துகிற கொலை பாதகத் தொழிலை ஒரு போதும் செய்யக் கூடாது. நமது பார்வைக்குச் சுத்தமாயும் மனதுக்கு ரமணீயமாயும் நல்ல பரிமள முள்ளதாயும் நாவில் ருசி ஊறக் கூடியதாயும் சாத்தியமான வரையில் புதிதாயும் ஆகர்ண சாத்தியமாயும் உள்ள உணவுகளையே நிதானமாயும் நன் ருய் மென்றும், உணவு தர்மத்தை அனுசரித்தும் உண்ண வேண் டும். உணவு விஷயத்தில் பயப்படாமல் உணவு தர்மத்தை அறிந்து உண்பவனுக்குச் சரீர சுகத்தைப் பற்றிய பயமே கிடையாது.

5. இராத்திரி காலத்தில் தேகத்திற்கு அதிக வேலை யில்லா மல் தேகம் ஓய்வு அடைந்திருக்கிற படியால் தேக சக்திகள் அதிக மாக நஷ்டமாவதில்லை. ஆனது பற்றிக் காலையில் விழித்தவுடன், சுறு சுறுப்பாயிருக்கிருேம். ஆகவே, அப்பொழுது சரீரத்திற்குப் புதுச் சத்து வேண்டியதில்லை. காலை உணவு வெகு லேசாயிருக்க வேண்டும். காலை உணவுக்கு முன் கொஞ்சம் வியாயாம் செய்வது நலம். நன்ருய் மென்று இயற்கை மார்க்கத்தில் திரும்பி உணவு தர்மத்தை நன்ருய் அனுஷ்டித்தால் வெகு நாளாய் அடைந்திருக் கும் கிருத்திரிமப் பசி கழிந்து இயற்கைப் பசி யுண்டாகும். இயற் கைப் பசி உண்டானபோது காரியமனம் சரியான உணவைக் குறித் துக் காட்டி எது போஷண முள்ளதோ அதையே விரும்பும்படி செய்யும். உணவு பதார்த்த பரிசோதனையில் இயற்கைப் பசியே தக்க சாக்ஷியாகும். இயற்கைப் பசியில்லாத காலத்தில் சோதனையின் அனுபவம் வியர்த்தம். கிருத்திரிம நவீன உணவுகளால் கிருத்திரி மப் பசி உண்டாகி அதனுல் கெட்டிருக்கும் நாவை அவலம்பித்து மனம் கெடாமலிருக்கும். ஒருவருக்குக் காரியமனம் நல்ல மந்திரி யாகும்.

உணவு தர்மம்

6. தற்கால உணவு உமக்கு ஆரோக்யத்தைக் கொடாமலிருந்தால் அதை நிவர்த்தி செய்து எந்த மாதிரி வேண்டுமோ அதை ஏற்படுத்திக்கொண்டு ஜீரண கருவிகளிலுள்ள மலங்களைக் கழிக்க அவைகளுக்கு அவகாசம் கொடுங்கள். ஒருவர் உணவில்லாமல் (நல்ல பிராணன் 40-நாள் என்கிற பழமொழியின்படி) அனேக நாள் ஜீவிக்கக்கூடுமொனாலும் அப்படிப்பட்ட அதிக நாள் உபவாசத்தை யாம் உங்களுக்குச் சொல்லவில்லை. 15 நாள்களுக்கு ஒரு தரம் 24 மணி நேரம் ஜீரண உறுப்புகளுக்கு ஒழிவு கொடுப்பது நல்லதென்று யோகிகள் ஏகாதசி என்கிற ஹரிவாஸரத்தில் உபவாசத்தை விதித்திருக்கிறார்கள். பிணி காலத்தில் தேகத்தில் தங்கி யிருந்து உபத்திரவித்து வரும் மலங்கள் கழியும் பரியந்தம் "லங்கணம் பரமௌஷதம்" என்று உபவாசமாயிருக்கக் கோருகிறோம். மிருகங்கள் பிணியாகும் காலத்தில் தீனியைத் தின்னாமல் தேக உறுப்புகளுக்கு ஓய்வு கொடுத்துக்கொண்டு தேகம் சௌக்கியமான பின்பு உணவை உண்கின்றன. மிருகங்களின் அனுஷ்டானத்தைக் கண்டு அதை உபதேசமாகக் கொண்டு (விலை யில்லா மாணிக்கம்போல்) அந்த ஞானத்தை அதிக பிரயோஜனமுள்ளதாகக் கொள்ளவேண்டும்.

7. அளவு நிறை இவைகளையே கணக்கிட்டும் கார, லாரருசிகளையே யோகித்தும் உயிருள்ள தேகத்தைக் கருவிகள் போல் செய்துவிட வேண்டுமென்று வித்தியார்த்திகளுக்கு யாம் உபதேசிக்கவில்லை. இந்த மாதிரி மூர்க்கமாய் உபதேசிப்பது சரியானதல்லவென்றும் காரிய மனதில் அனேக வித தப்பு எண்ணங்களை நிரப்புகிறதென்றும் நினைக்கிறோம். உணவை நிர்ணயிப்பதில் முன் ஜாக்ரதை வேண்டுமென்றும் பிறகு இது விஷயத்தில் கவலை யடையக் கூடாதென்றும் நினைக்கிறோமானாலும், போஷணம், பிராணகர்ஷணம் இவ்விரண்டு எண்ணங்களையும் கடைப்பிடித்து முன் சொன்ன உணவு தர்மத்தின்படி உணவை நன்றாய் மென்றும், இயற்கை சக்தி தன் வேலையைத் தானே செய்யுமென்னும் முழு நம்பிக்கையுடனும் உண்ணவேண்டும். பூரண ஆரோக்கியமுள்ளவன் தன் உணவைக் குறித்துப் பயப்படவே மாட்டான். சுவாச ஒழுங்கு, மன சந்தோஷம், உணவு தர்மம், இயற்கை வாழ்க்கை இவைகளை அனுஷ்டிக்கும் பக்ஷத்தில் உணவில் ஒவ்வொரு கவளத்திலும் ரசாயன நூல் முறைப்படி எவ்வளவு போஷண வஸ்துக்கள் இருக்கிறதென்று சோதிக்க அவஸ்யம் இராது. காரிய மனதைப் பூர்த்தியாய் நம்பப் பயப்படாதே. அதே கடைசி வரையில் உன் முக்கிய தோழன்.

இது காஞ்சீபுரம் யோகி இயற்கை தாசனால் எழுதப்பட்ட "ஆரோக்கிய மார்க்கப் பிரகாசம்" என்பதில் 11-வது பாடம்.

"நவசக்தி."

மழைச் செழிப்பும் நாகரீகமும்

(378-ம் பக்கத் தொடர்ச்சி)

B. S. குமாரஸ்வாமிப்பிள்ளை எழுதியது

(6) ஐரோப்பாவின் தென்பாகம்

ஆபிரிக்காவின் வறட்சி நீரின்மை ஐரோப்பாவின் தென் பாகத்திற்கும் பரந்து வந்திருப்பதை வெளிப்படையாய்க் காண்கின்ேறாம். ஸ்பெயின் தேசத்தில் ரோமர் அரசு புரிந்த காலத்திலும் அதன்பின் மூர் என்ற ஜாதியார் அரசாண்ட காலத்தும், பெர்டிஞண்டு அரசர் அரசு புரிந்த சமயத்திலும் மிகவும் செழிப்புற்றுச் செல்வ வளம் பொருந்திய கார்த்தேஜ் மாகாணமானது இப்பொழுது நீரின்றி வறுமையுற்றுச் செம்மையாய்ப் பொருள் அளித்த மலைச் சரிவுகள் எல்லாம் வனாந்தரங்களாய்க் காணப்படுகின்றன. பிரெஞ்சு தேசத்திலும் மழை குன்றித் தட்ப வெப்ப நிலை மாறி வெப்பமே மிகுந்து வருகின்றது. இற்றலி நாட்டிலும் மழை குன்றியே பொழிந்தாலும், நீர்ப்பாய்ச்சலுக்கு வசதியாகும்படி பெரிய கால்வாய்களும் அணைக்கட்டுகளும் உண்டு பண்ணியிருக்கிறார்கள் ; அப்பூலியா வென்ற இடத்தில் உலகத்திலுள்ள அணைகளெல்லாவற்றிலும் பெரிதான ஓர் அணை உண்டு பண்ணியிருக்கிறார்கள். அப்பெனைன்ஸ் என்ற மலைப் பாகத்தில் வரவர மழை குன்றியே காணப்படுகிறது. ஐரோப்பாவின் தோட்டமென்று பெயர் விளங்கியதும், ரோமாபுரியின் தானியக் களஞ்சியம் எனப் பெயர் பெற்றதும், வரன் முறையாகப் பன்னிரு அரசாங்கத்தார் கவர்ந்துகொள்ள வேண்டுமென்று ஆசை யுற்றதுமான ஸிஸிலித் தீவானது (Sicily) இப்பொழுதோ மிகவும் நிலை குன்றி விட்டது. கஷ்டத்துடன் நீர்ப்பாய்ச்சலினால் ஆரஞ்சு எலுமிச்சந் தோட்டங்கள் உண்டாயிருக்கின்றன. அதைக் கடைக்கண் பார்வையுடன் உற்று நோக்கத்துடன் அபகரிப்பான் எண்ணிய அரசாங்கத்தார் இப்பொழுது அதை ஏறிட்டுப் பாராமல் இருக்கின்றார்கள். மேடான தரை முழுமையும் மரம் புற்பூண்டுகள் இழந்து வருடத்திற் கொருமுறை யேனும் மழையின்றி வனாந்தரமாய் மாறிக் காணப்படுகின்றது.

(7) மெஸெப்பொட்டேமியா—பாரஸீகம்

உலகில் செழிப்புள்ள நாடுகளில் எல்லாவற்றிலும் முதன்மையான தெனப் பெயர் துலங்கியது மெஸெப்பொட்டேமியா வென்ற நாடாகும். ஸார்கன், ஸெர்ஸஸ், நெபுச்சத்நிஸார், டேரியஸ், ஸைரஸ் முதலிய பெரிய அரசர்களுக்கு அபரிமிதமான செல்வத்தை

வாரி இறைத்ததும், அரேபியன் கட்டுக்கதைகளின் பிரதானி யாகின்ற காலிப் ஹாரோனல் ராஸ்சிட் என்பவருக்கு கௌரவத்தை யும் மேன்மையையும் அளித்ததும் இந்நாடே யாம். பின் மழை யின்மையாலும் உலக சக்கரவர்த்திகளில் ஒருவரான ஹுலாகு (Hulagoo) என்பவரின் தீய செயலினல் ஆற்றெணுக் கொடுமை யால் கால்வாய்களும் நீர் வசதிகளும் பாழ்படுத்தப் பட்டமையாலும் அந்நாடும் பாழடைந்து போயிற்று. இப்பிரிற்றீஸ் - டைகிரீஸ் இரண்டு நதிகளிலும் ஜலங் கிடையாது. அவைகளினின்று கிருஷி யேற்ற முடியாது. அந்நதிகளை எம்மட்டுத் தாழ்த்தித் தோண்டிய பொழுதும் வேண்டிய அளவு ஜலம் கிடையாது. நதிகளின் உற் பத்தி ஸ்தலங்களிலும் காடுகள் யாவும் அழித்து விட்டதால் மழை பொழிந்து ஜலம் வருகிறதற்கு மார்க்கமில்லை. இனி அடுத்த பார ஸீக நாட்டிற் செல்லும்பொழுது அதின் தன்மை இதினும் பரி தபிக்கத் தக்கதே. அனேக ஆயிர வருடங்கட்கு முன்னரே செழிப் புற்றுச் சிறந்து விளங்கியது இந்நாடு. கிரேக்கர் பெரியோராய் வாழ்ந்து வந்த காலத்திலும் பாரஸீக நாட்டைக் கண்டு பொறுமை கொண்டும் பயந்தும் இருந்தனர். நாலைந்து நூற்றாண்டுகளாய் உயர்ந்த மெஸப்பொட்டேமியா வென்ற நாட்டைத் தாக்கி யெடுப்ப தற்கு ரோமாபுரி அரசர்களுடன் விளைவித்த போர் வலீரீயன் என்ற ரோம சக்கரவர்த்தியையும் தோற்கடித்து ரோம சைன்னிய முழுமையும் பிடித்தடக்கினர்கள். ஆனல் இப்பொழுதோ அதன் நிலைமை யென்ன? லண்டன்மா நகரத்திலும் பெரும் பெயர் பெற்ற பெர்ஸிப்பாலீஸ், சூஸா, என்ற பெரு நகரங்கள் எல்லாம் மாய்ந் தொழிந்து மக்களே அவ்விடம் காணமுடியாத நிலையில் பாழ் பட்டுப் போயின. இவைகளின் காரணமென்ன? மழைக் குறைவே. இன்னும் சில பாகங்கள் நீர்ப்பாய்ச்சலினலேயே ஜீவித்திருக்கின் றன.

(8) ஆசியாவின் மத்தியபாகம்

கோபி வனந்தர மென்ற மத்திய ஆஸியா வனந்தரமானது அனேகம் வனந்தரங்களின் பொதுப் பெயராகும். ஸ்வென் ஹெய்டன், ஸார் ஆரல் ஸ்டீயன் இருவர்களும் இவ்வனந் தரம் முழுமையும் நன்றாய்ச் சுற்றிப் பார்த்து வெளியிட்டிருக்கும் செய்திகளைக் கவனிப்போம். பாழடைந்த கோயிற்புரங்களும் கோபுர விக்கிரஹங்களும் கல்லெழுத்துக்களும் அக்காலத்து நாகரீக நிலைமையினை நன்குணர்த்தும் சின்னபின்னமான பிரமாணங்களும் மருந்தினலும் மூலிகைகளினலும் அழியாமற் பாதுகாத்து வைக் கப்பட்டிருக்கும் மனித சரீரங்களும் காய்ந்து வறண்டு தோன்றும் நதிப்போக்குகளும் ஏரிகளும் மிகுந்து காண்பதாய் இருவரும் கூறு கின்றனர்கள். உஷ்ணகாலத்தில் ஜலக்கஷ்டத்தினல் பிரயாணஞ் செய்ய முடியாமல் குளிர்காலத்தில் பனிக்கட்டியை ஒட்டகங்களின்

மீது ஏற்றிக்கொண்டுபோய்த் தாகவிடாய் தீர்த்துப் பிரயாணஞ் செய்து சுற்றிப்பார்க்க முடிந்ததென்றும் ஸர் ஆர்தர் ஸ்டீன் கூறுகின்றார். ஒருமாதப் பிரயாணஞ் செய்யும் வரையும் தண்ணீரே காணமுடியாத தன்மையிலும் தரைகள் காணப்பட்டனவாம். சீன தேசத்தார் உற்பத்தியாகி வெகுகாலம் செழிப்புடன் வாழ்ந்து வந்ததும் பின்மழை குன்றவே வெளிக்கிளம்பிப் போனதுமான அப்பாகத்தைச் சுற்றிப் பார்க்கும்பொழுது பெரிய ஏரியொன்றிருந்ததாகவும் அதற்குத் தண்ணீர் நிரப்பிய நதிப்பாகங்களும் இப்பொழுது நீரிழந்து வறுமையுற்றுக் கானலினும் கொடிய தீயுமிழ் வெப்பமெனக் கூறும்படியான பாலைவனமாய்க் காணப்படுகின்றன. ஹன்ஸ் (Huns) என்ற ஜாதியார் மிகச் செழிப்புடன் கோபீ வனாந்தரத்தில் வாழ்ந்து வந்ததாயும் அவர்கள் அடிக்கடி சீன தேசத்திற் புகுந்து கொள்ளைகொண்டு போயினார்கள் என்றும் அவர்கள் தொந்தரவை எவ்வாறாயினும் தடைசெய்ய வேண்டுமென இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னாலேயே பகீரதப் பிரயத்தினத்துடன் கெட்டியிருந்த 1000-மைல் நீளமுள்ள கோட்டை மதிலும் அவ்வனாந்தரத்தை நோக்கிய வண்ணமாய் நிற்பதை இன்னும் காணலாம். ஆசியக்கண்டம் முழுமையும் அடக்கி யரசாண்டவரும் கிரீமியாவை ஜெயித்தவரும் ரஷ்ஷியாவின் பெரிய பிரபுக்களிடம் இருந்து கப்பம் பெற்றவருமான உலக சக்கரவர்த்தியெனப் பெயர் புனைந்த செங்கிஷ்கான் என்பவரின் பெரு நாட்டின் தலைநகரான காரக்கோரம் என்ற உன்னத நகரம் இவ்வனாந்திரத்தின் வடபாகத்தில் அமைந்திருந்ததாய்க் காணப்படுகின்றது. வீனிஸ் நகரத்துப் பிரயாணி மார்க்க போலோ வென்பவர் 1260 கி. பி. யில் இப்பாகத்தைச் சுற்றிப் பார்த்தபொழுது கோபி வனாந்தரத்தைச் சுற்றிவர ஒருவிதத் தாயினும் வருத்தமே ஏற்படவில்லையானால் அக்காலத்தில் அப்பாகம் எவ்வளவு செழிப்புற்றிருக்கலாம் என யூகித்தறிந்து கொள்ள வேண்டியதே!

உலகில் காண்கின்ற வனாந்தரங்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாய்க் கூர்ந்து பார்க்கும்பொழுது எல்லாவற்றிற்கும் பூர்வீகத் தன்மை ஒன்றேயாதல் வேண்டுமெனக் கூறுதல் துணிபு. அவைகள் ஆதியில் பாலைவனங்களாய் இராமல் அனேக ஆயிர ஜனங்களுக்கு ஒரு காலத்தில் உணவையும் செல்வத்தையும் உன்னத பதவியும் அளித்து மிகுந்த நாகரீகத்தின் இலக்கணங்கள் பொருந்தியிருந்தனவென்றே காணப்படும். ஆனதினால் செழிப்புற்ற முல்லை மருதம் நெய்தல் நிலங்கள் பாலைவனமாய் மாறுவதற்கும் உலகிலேயே வரவரத் தண்ணீர் குறைந்து காண்பதற்கும் உலகம் முழுமையும் சேர்ந்து பற்றியிருப்பதான சில முக்கிய காரணங்க ளிருக்கவேண்டும். அவ்வாறாயின் அக்காரணங்க

ளென்ன? அக்காரணங்களை யறிந்து அக் குறைகளை நீக்க மார்க்கமுண்டோ?

9. பூமியின் ஜலக்குறைவு

சூரிய மண்டலத்தினின்றும் தெறித்து விழுந்த இப் பூவுலகமானது அனேக மாற்ற தேற்றங்கள் அடைந்து தற்கால நிலைமையில் காண்கிறோமாயினும் முதலிலேயே தனக்குக் கிடைத்த நான்கு பூதங்களின் ஒன்றான தண்ணீரைக் கூட்டிக்கொண்டு வர ஒருவருக்கும் இயலாத காரியம். ஆனால் கிடைத்த தண்ணீர் குறைந்து வர முடியுமோ? அதுவே நாம் ஆராய்ந்தறியவேண்டும் காரியம். அடியிற் கூறப்படும் காரணங்களினால் பூமியில் முதலில் தங்கி நின்ற தண்ணீரும் இப்பொழுதும் காணப்படும் தண்ணீரும் வரவர நாளடைவில் குறைந்து வருவதாகவே நன்கறியப்படும்.

(i) உலகில் குளிர்மிகுந்த ஒரு கால வரையில், ஜலத்தின் ஒரு பாகம் பனிக்கட்டியாய் மாறி மலைகளின் சிகரங்களில் தங்கியிருந்து பிரயோசனமற்றுப் போயிருக்கின்றது. இவைகள் மழைத் துளியாய் மாறித் தண்ணீர் தருவதற்கு இயலாத காரியம்.

(ii) வனங்களின் புற்பூண்டுகளும் மரங்களும் தாவரப் பொருள்களும் ஜலத்தைப் பலவாறு உட்கொண்டு மலையினுள்ளும் குன்றுகட் கிடையிலும் சில பாகம் செல்லுகின்றன.

(iii) இவைகளுடன் ஜலமானது நீர் ஆவியாகவும் உயிர் வாய்வாகவும் பலகாரணங்களினால் மாறி நீரின் தன்மை யிழந்து விடுகின்றதினால் அம்மட்டிற்கு உலகில் ஜலம் குறைந்துவிடுகிறது.

(iv) இப்பொழுது நாம் காணப்படும் ஆழத்திலும் மிகுந்த ஆழத்தினுள் ஜலம் ஆழ்ந்து போய் மனிதரின் எவ்விதப் பிரயத்தனத்தினாலும் எடுக்க முடியாத நிலையில் தங்கிவிடுகின்றது. சூரிய வெப்பத்தினால் தாக்கப்பட்டு ஆவியாகி மேகமண்டலம் அடைந்து ஜலத்திரள் தரும் மழை பொழியும்படி வசதியும் தரவொண்ணாது கதிரவன் கதிரும் வீசத் தகாதபடி அவ்வளவு ஆழமான இடத்திற்கு ஜலம் சென்றுவிடுகின்றது.

இந்நான்கு காரணங்களிலும் கடைசிக் காரணமே மிகவும் அபாயம் விளைவிப்பதாய் நிதானிக்கப்படுகின்றது. வியாழன் என்ற கிரகம் இப்பொழுது அனேக ஆவிகளால் சூழப்பட்டு ஏக வெளியில் சுற்றித்திரியுந் தன்மையை இவ்வுலகம் ஒரு காலத்தில் பொருந்தியிருந்தது. அப்பொழுது மிகவும் வெப்பத்தோடிருந்து வரவரக் குளிர்ச்சி யடைந்து பூமியின் மேற்பாகத்தே தோடு போன்ற கட்டிப்பாகம் காணலாயிற்று. கட்டியாய்ச் சுருக்குற்ற காலத்தில் சில பாகங்கள் பள்ளத்தாக்குகளாய் அவைகளில் சமுத்திர ஜலம் தங்கிநின்றது. சமுத்திர ஜலம் நீராவியைத் தந்து

அந் நீராவி மழைத்தாரையாகி சுத்த ஜலத்தையும் கொணர்ந்தது. அப்பொழுது பொழிந்த பெரு மழையின் ஏதுவால் மலையுங் குன்றும் பள்ளத்தாக்கும் சரிந்த தரையும் சம நிரப்பான பாகமும் பல விடங்களில் தோன்றின-ஜலம் அப்பொழுதும் மேற்பாகத்தே தங்கி நிற்கமுடியாது. அதிக வெப்பம்பற்றி அவைகள் உடன் நீராவியாக மாறின. ஆனதினுல் குளிரான நீரின் றன்மை பூமியின் மேற்பாகத்திலும் மேகத்தோடும் காணப்பட்டது.

ஆனுல் நாளடைவில் பூமியானது—வெப்பந் தணிந்தபொழுது பூமியின் ஜலத்தை யேற்றுக்கொள்ள வசதியுள்ளது. பூமியின் மேற்ரேடு முழுமையும் ஜலத்தை உட்கொள்வதற்குத் தகுதியான தட்ப நிலையுற்றுச் சிகரங்களும் பூமியின் சில அடுக்குப் பாகங்களும் ஒரு பகுதி ஜலத்தை உட்கொண்டது. ஆகவே இப்பொழுது பூமியின் எதுபாகத்தைக் கருவியினுல் துளைத்தபோதிலும் அவ்வாழ பாகத்தில் ஜலம் பொங்கி வருவதாகவே காண்கின்ரேம். நிலக்கரி யெடுக்கும் சுரங்கத்திலோ, வேறெதாவது உலோகம் எடுக்கும் சுரங்களிலோ தண்ணீர் காணுமல் இருக்க முடியாது.

மேற்கூறியவைகளினின்றும் இவ்வுலகமானது நாட்செல்லுந் தோறும் நீர் குன்றி வருவதாகவும் அக் குறையை நீக்க மனிதரின் எவ்விதப் பிரயத்தினத்தினுலும் இயலாத காரியம் என்றும், ஜலமிழந்து வறுமையுற்ற தன்மையினுலே உலகிலே சிறந்த பாகமாய்த் தோன்றியவைகள் பாழடைந்து பாலைவனமாய் மாறின வென்றும் இதர பாகங்களிலும் மழை குன்றியே வருகின்றதென்றும், அதுபற்றி ஜனங்கள் வசிப்பதற்குரிய சௌகரியமெல்லாம் இழந்து இவ்வுலகம் முழுமையுமே பாழ்வனமாய் மாறிவிடவுங் கூடுமெனவும் நன்கறியக் கிடக்கின்றது.

10. நிகழ்கால நிலையென்ன ?

உலகம் முற்றிலும் மழை குன்றிப் பாழுந் தரைகளே பெருகி வருகின்றபோதிலும் இராஜாங்கத்தார் எல்லோரும் ஏக மனதுடன் ஒத்துணர்வோடு முயற்சி செய்வாராகில், உலகில் எப்பொழுதும் வசித்திருக்கவும் கூடுமென்று சில தத்துவ சாஸ்திரிகள் கூறுகின்ருர்கள். நமது சமீபத்தில் காண்பதான செவ்வாய்க் கிரஹத்தில் பெரு முயற்சியான நிர்ப்பாய்ச்சலினுல் ஜனங்கள் வசித்து வருகிருர்களென்று கண்டு பிடித்திருக்கிருர்கள். உயர்ந்த தத்துவ ஞானிகளாகின்ற வியாப்பொலி, லௌவல், பிக்கரிங்கு இவர்கள் செவ்வாய்க் கிரஹத்தில் மனிதர் வசிக்கின்ருர்கள் என்றும், நீர்ப்பாய்ச்சலுக்கு வேண்டும் பெரிய கால்வாய்கள் அம்மனிதர்கள் இயற்றி யிருக்கிருர்கள் என்றும் கூறுகின்ருர்கள். ஆனுல் நாம் வசிக்கும் இப்பூவுலகமும் அவ்வளவு வறுமையடைகின்றபொழுது,

நீர்வேண்டும், நிலம்வேண்டும், பெயர்வேண்டும், பெரும் பொருள் வேண்டும், என்னும் அழியாப் பேரின்ப நிலைவேண்டும் என்று விரும்புகின்ற மனித ஜென்மம் அப்பொழுது தழைத்திருக்குமோ வென்று நிச்சயமாய் ஒருவராலும் கூறமுடியாது. அக்காலத் தன்மையைத் திட்டமாய்த் தெரிந்து எழுத நாம் சற்றேனும் வல்லமை யில்லாதவரே யாம்.

பானுபாய்

(ஸ்ரீமான் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை எழுதியது.)

XVI

மீண்டும் மகா ராஜா கீர்த்திநாதர் சிரோமணியாரைப் பார்த்து "நான் அப்பெண்ணைப் பார்க்க விரும்புகிறேன். அவள் நிரம்பிய அறிவுடையவளென்று நான் கேள்விப்பட்டிருக்கின்றேன்" என்றார். அதற்கும் சிரோமணியார் பதிலுரைக்கவில்லை. மகா ராஜா மீண்டும் பணிவுடன் "ஐய! அவள் விவேகசாலியென்றும், எவற்றையும் எளிதில் உணரக்கூடியவளென்றும் நான் கேட்டிருக்கின்றேன். நான் அவளுக்கு விளக்கமாகவுந் தெளிவாகவு மெடுத்துச் சொல்வேனானால், அவள் என் கருத்துக் கிணங்குவாளென்று நான் நிச்சயிக்கின்றேன்" என்றார்.

உடனே எல்லோரும் வியப்புந் திகைப்புங் கொள்ளும்படி, பானுபாய், பொற் பாவை நடந்து வந்தாற்போல, அங்கு மெல்லென நடந்து வந்தாள். அதனைக் கண்டு அங்கிருந்தோரெல்லோரும் பெருங் கலக்க முற்றனர். ஒருவரும் பேசுவதற்கு நாவெழாமல் உட்கார்ந்திருந்தனர். பானுபாய் மகா ராஜாவை யணுகி "ஐய! நீங்கள் என்னைப் பார்க்க வேண்டுமா?" என்றாள்.

அக்கேள்விக்கு மகா ராஜா மறு மொழி கொடுக்கக்கூடவில்லை. அவருக் கெதிரே பொன்போலும் பொலிவுற்று மனத்திற் கின்பம் பயக்கவல்ல அவளது அழகின் பெருக்கத்தைக் கண்டு, இது தெய்வ அணங்கோ? "இவ்வடிவைப் படைத்த வடி வெவ்வடிவோ யானறியே னருமையாகக், கைபடியத் திருமகளைப் படைத்திவளைப் படைத்தனனோ கமலத்தோனே" என்று பிரமித்துத் தன்னை மறந்து போயினர். பானுபாய் அங்கு வந்ததும் மாணவ ரெல்லோரும் மகா ராஜாவைச் சூழ்ந்து கொண்டனர். அவர்களெல்லோரும் அவளைத் தங்கள் சகோதரியைப்போல மிக்க

அன்போடு நேசித்து வந்தார்களானதால், ஒருவரும் அவளை விட்டு பிரிந்திருக்க மனமில்லாதவர்களாய் அவளுடைய சம்பாஷணை யைக் கேட்க ஆவல் கொண்டனர். அவள் அழகிலும் ஒழுக்கத் திலும் அறிவிலுஞ் சிறந்தவளென்று தம் மனத்திற் பட்டதினால், மகா ராஜா அவர்கள் அவள் மீது இரக்கங்கொண்டு, அவளைக் காப்பாற்ற வேண்டுமென்று தம் மனத்தி லெண்ணினார். பானு பாய் மீண்டும் "ஐய! என்னை அழைத்து வரச் சொன்னீர்களா?" என்று கேட்டாள்.

மகா ராஜ தந்திரியாகிய மகா ராஜா கீர்த்தி நாதராய் அவர்கள் எளிதில் மயங்குவா ரல்லர். அவர் மெதுவாக, "ஆம், நான் உன்னோடு சில விஷயம் பேச விரும்புகிறேன்" என்றார்.

பானுபாய் தலை குனிந்தபடி, பூப்போலுஞ் சிவந்த தனது மெல்லடியின் பெரு விரலைப் பார்த்த வண்ணமே யிருந்தாள். மகா ராஜா அவர்கள் அவளைப் பார்த்து "நீ விவேக சாலியான பெண். உனக்கு எல்லா விஷயங்களையும் விவரித்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. படானி நவாபை யெதிர்ப்பதற்கு நம்மில் ஒரு வருக்கும் ஆற்றலில்லை. இருந்திருப்பின் நானுன்னை வேண்டிக் கொள்ளேன். சில வேளை, நீ எல்லாவற்றையுங் கேள்வியுற்றிருப் பாய்" என்று சொன்னார்.

"ஆம், நானெல்லாவற்றையுங் கேள்வி யுற்றிருக்கின்றேன்" என்றாள். பின்னர் மகா ராஜா "நானின்னும் உனக்கு விவரித் துச் சொல்ல வேண்டுவதில்லை. நீயே சுவேச்சையாக நவாபவர் களிடம் போகாவிடின், அவர் நமது குரு தேவரையும் சிரச்சேதஞ் செய்து மற்றவர்களையுங் கொன்று ஊரையும் நெருப்புக் கிரை யாக்குவது திண்ணம். இவற்றையெல்லாந் தடுக்க நம்மால் இய லாது. இவ்வாறு இரத்தஞ் சிந்துவதால் யாது பயன்? குரு தேவர் கொல்லப்படுவாராயின், நமது வங்காள நாடு முழுதும் மனித இரத்தமாகிய வெள்ளம் பெருகியோடும். ஒவ்வொரு வங்காளியர் வீட்டிலும் அழுகுரல் நிரம்பும். எண்ணிலா மாதர்கள் கைம் பெண்க ளாவார்கள். எண்ணிலாப் பிள்ளைகளும், குழந்தைகளும், சிசுக்களும் அநாதைக ளாவார்கள். உன்னைப்போன்ற அறிவுடைய பெண்ணும் பயனற்ற ஒருவனுக்காகத் தன் தேசம் இவ்விதமாகப் பாழாகும்படி பார்த்திருக்க வேண்டுமா?" என்றார்.

"ஆனால், ஒரு படானியின் மடியை நான் அலங்கரிக்கவேண்டு மென்று தாங்கள் விரும்புகிறீர்களா?" என்று பானுபாய் மெல்லிய குரலால் வினவினாள்.

பின்னர், அவள் மாணவர்பக்கந் திரும்பி "சகோதரர்களே! மகா ராஜா கீர்த்திநாதரவர்கள் உண்மையில் என்னை பேகம் பானு பாயாகும்படி விரும்புகிறார்" என்றாள்.

அதனைக் கேட்ட மாணவர்கள் எதோ சொல்லவா யெடுத்த போது, உடனே அவள் தன் உதட்டின் மேல் விரலை வைத்து அவர்களைப் பேசவொட்டாமல் நிறுத்தினாள். அதனை யறிந்த மகாராஜாவின் முகம் நாணத்தால் சுருங்கியது, "இல்லை இல்லை, நீ அப்படி யாவதற்கு நான் கருதவில்லை. இரசபுத்திர பெரு மாட்டிகளைப்பற்றிச் சரித்திரங்களில் நீ வாசித்திருப்பாய், மகமதி யர்கள் முதலில் தேசத்தை ஜெயித்தபோது, அநேக இராசபுத்திர மாதர்கள் வீண் கொலை நேருவதினின்றுந் தேசத்தைக் காத்தற் பொருட்டுத் தங்கள் சுவேச்சையாகவே பிரேதங் கிடத்தும் ஈம விறகின் மேல் எறினார்கள்" என்றார்.

"மகாராஜா! அம் மாதர்களைப்போலவே நானுஞ் செய்ய வேண்டுமென நீங்கள் விரும்பலாம். ஆனால், நான் படானியின் அந்தப்புரம் செல்வேனாயின் எல்லாம் ஒழுங்காகிவிடும், அவர்கள் என்னை அடைவார்களாயின், அவர்கள் பின்வாங்கிவிடுவார்கள்" என்று கூறினாள்.

"மெய்தான், எல்லாம் சில நாள்வரையும் நடக்கும்" என்று சொல்லி "ஒருயிரால் ஆயிர முயிர்க்குச் சுகமுண்டாகுமானால், ஏன் அவ்வோருயிர் பலியாதல் கூடாது?" என்றார் கீர்த்திநாதர்.

"நீங்கள் சொல்வது ஆயிரம் பங்கு மெய்தான்" என்று மனக்கொதிப்போடு பதிலுரைத்து, "மகாராஜ! நான் கேவலம் பெண்பா லாயிற்றே, நானேன் இப்போது உயிர் துறத்தல் வேண்டும்? அன்றலர்ந்த பூப்போன்ற இந்த இளவயதில் என்னுடைய வாழ்க்கை நலங்களை யெல்லாம் நானே என் அனுபவித் தற் கில்லாமற் செய்து கொள்ளல்வேண்டும்? நான் படானி நவாபின் மனைவியாதல் மிகவும் உசிதமாகும்" என்றாள்.

பானுபாயின் வாய் வழிவந்த சொற்களைக் கேட்ட மகாராஜா வியப்புற்றனர். மாணவ ரெல்லோரும் மீண்டும் எதோ சொல் வதற்கு வாயெடுத்தனர், உடனே பானுபாய் அவர்களைப் பேச வொட்டாது நிறுத்தி,

"மகாராஜ! நவாபின் பிடியினின்றும் என்னுடைய சகோ தரர்கள் என்னைக் காக்கமாட்டார்களென்று நீங்கள் நினையாதீர் கள். உண்மையில் அப்படிச் செய்ய அவர்களுக்கு ஆற்றலுண்டு. அவர்கள் விரும்பினால் படானியரை நொடிப்பொழுதில் சாம்பராக்கி விடுவார்கள்; ஆனால், வீணாக இரத்தஞ் சிந்துதற்கு அவர்களுக்குத் தைரியங் கொடுக்க மாட்டேன். என்னுடைய சகோதரர்கள் செய்யக்கூடிய வேலைத் திறத்தைக் காட்டுகின்றேன் பாருங்கள்" என்றாள்.

அவ்வாறு சொல்லிப் பானுபாய் வித்தியார்னவனைப் பார்த்து "சகோதரா! உன்னுடைய வில்லை யெடு" என்றாள்.

உடனே வித்தியார்னவன் ஒரு குதி குதித்துத் தன் வில்லை யெடுத்தான். உடனே சிரோமணியார் "எடாதே" என்று தடுத்து அவன் கையிலிருந்த வில்லைப் பிடுங்கிக்கொள்ள யத்தனித்தார். அவர் சரீரமுற்றும் நடுக்க முற்றது. அதனைக் கண்ட பானு "வித்தியார்னவ! வில்லை வைத்து விடு" எனலும், அவன் அதனை வைத்துவிட்டான்.

பிறகு பானுபாய், வீர தீரத்தோடு மகா ராஜா கீர்த்தி நாதர் பக்கந் திரும்பி "ஐய! இத்தேசத்தில் உங்களைப்போலக் குடும்ப சாபங்களைப் பெற்றவர்கள் எத்தனை பேரிருக்கின்றார்கள்? உண்மையாக அநேகர் இருக்கின்றார்கள். இல்லையாயின் தேசமானது இவ்வித சீர் கேடான நிலைமைக்கு ஏன் வருதல்வேண்டும்? நீங்கள் படானியர் தலைவரிடமிருந்து, இது விஷயமாக முக்கிய தூதராக வந்திருக்கிறீர்கள். அன்றியும், ஒரு இந்து சீமாட்டியை முகமதியனுக்கு வைப்பாட்டியாகும்படி கேட்டுக்கொள்ள உங்களுக்குச் சொந்தமான ஞான குருவினிடமே வந்திருக்கிறீர்கள். அவ்வேண்டுகோளைத் தாங்கள் மறுக்காமலும், தங்கள் மனமாகிய பெருங் கதவுக்கு நாணமென்னுந் தாழ்க்கோல் சிறிதுமிடாமலும் போய்விட்டீர்கள். ஐயோ! தாங்கள் எவ்வளவு இழிகுணமும் பழிதொழிலும் மானமில்லாத் தன்மையுமுள்ள பிராணியாக இருக்கின்றீர்கள். நமது தேசம் ஏன் அறநெறி தவறும் அன்னிய ஆட்சியிலிருக்கிற தென்பதை நான் இப்போ தறிகிறேன். எல்லா வளங்களும் சாந்தியும் வாய்மையும் நிரம்பி யிருந்த தேசம் ஏன் இவ்வித சீரழிந்த நிலைமைக்கு வந்ததென்பதை நான் இப்போது உணர்கிறேன். நம்முடைய தேசத்தைமீளப் பிறப்பித்தற்குத் தக்க காலம் இன்னும் வரவில்லை. என் மனமார நான் படானியின் மனைவியாவதற்குச் சம்மதிக்கின்றேன். என் படானிக்கு மாத்திரமா? இன்னும் எவனுக்கும் பெண்டாவதற்கும் ஒத்துக்கொள்ளுகிறேன். நமது தேச நன்மையின்பொருட்டு நான் பலியாவேன். இன்னும், இத்தேசத்தில் வேறு தேசத்தானை நடுநிலையுள்ள இராச்சியத்தைத் தாபிக்கத் தூண்டுவேன். அவனுடைய செல்வாக்கினாலேயே, தருமமாகிய பயிரை வளர விடாமற் செய்யும் உம்மைப்போன்ற களைப் பூண்டுகளை, நீதி மன்றத்தின் நலத்தைக் கருதி வேரோடு களைதல் எனது முதல் வேலையாகும். உம்மைப்போன்ற தேசத் துரோகிகளைத் தொலைத்துத் தருமத்தையும் நீதியையுந் தாபித்தல் எனது முதல் கடமையாகும். எவரும் வெறுக்கத் தக்க நீர் திரும்பிப்போய், உம்முடைய படானி எஜமானருக்கு, நான் அவருடைய இல்லாளாவதற்குச் சம்மதிக்கிறேன்" என்று சொல்லுங்கள். ஆனால், நான் அவரிடம் சொல்லுதற்குச் சில பிரதிஞ்ஞைக ளுண்டு. அவைகட்கு அவர் இணங்குவாராயின் நான் அவருடைய அரண்மனை புகுவேன். இல்லையாயின்,

என்னுடைய சகோதரர்கள் அவரையும் அவர் படையையும் கங்கா நதிக்கரைமேல் மாளச்செய்வது திண்ணம். ஆனால், அவ்வித காரியம் யாதொரு பயனையுந் தராதென்பது எனக்குத் தெரியும். அவர் மாண்டுபோவாராயின் அவரைப்போன்ற வேறொரு குரூரன் வங்காள தேசத்தின் சிங்காதனத்தில் உட்காருவான். நீங்கள் திரும்பிப்போய் நவாபவர்களை நேரில் வந்து, அவருடைய அபிப் பிராயங்களை எனக்குச் சொல்லச் சொல்லுங்கள். நான் இனி உங்களோடு பேசமாட்டேன்" என்றாள். அப்போது, ஆங்கு, குண்டூசியொன்று தரையில் விழுமாயின், அதன் சத்தத்தை யாவருங் கேட்கக்கூடிய அவ்வளவு நிசப்தமாயிருந்தது. ஒவ்வொருவரும் பானுபாயையே பார்த்தவண்ண மிருந்தார்கள்.

அவள் மீண்டும் "சகோதர வித்தியார்னவ! சகோதர சுதர்சன! சகோதரர்காள்! என் மனக் கருத்தும், என் பிரதிக் கினையும், என் மன நாட்டமும் உங்களெல்லோருக்குந் தெரியும், ஆதலால், நானுங்களுக்குப் புதிதாக வொன்றும் சொல்லவேண்டுவ தில்லை. நீங்கள் பொறுமையோ டிருக்கவேண்டும். நீங்கள் பொறுமையை யிழப்பீர்களானால் தருமத்தையும் நீதியையும் தாபிக்க முடியாது. படானி நவாப், ஓராண்டு வரையும் என்னைத் தீண்டாதிருக்கவும் வாரத்திற் கொருமுறை நான் உங்களைப் பார்க்க அனுமதி கொடுக்கவும் ஒத்துக்கொள்வாராயின் அவ்வோ ராண்டு கழிந்த பின்னர் நான் அவரது மனைவியாவதாகக் கூறு வேன். மேற்சொன்ன ஓராண்டளவும், என்னைவிட்டுப் பிரிந்து போய் இன்னும் வாராதிருக்கும் எனது கொழுநருக்காகக் காத் திருப்பேன். அதன் பிறகு, என் தலைவிதிப்படி நடப்பேன்" என்று கூறி உட்புறம் போய்விட்டாள். சிரோமணியார் பாட சாலையில் மகாராஜா அவர்கள் உட்கார்ந்திருந்து பானுபாய் கூறிய வற்றையெல்லாம் நெடுநேரஞ் சிந்தித்தார். அவ்வாறு சிந்தித்ததில் தான் உண்மையில் தேசத்திற்குத் தீங்கினனாயிருத்தலை நன் குணர்ந்தவராஞர்

XVII

ஒரு நாள் பகற்போது, ஏறக்குறைய உச்சி வேளையில், படகொன்று நதிக்கரை வந்து சேர்ந்தது. அப்படகிலிருந்து இரண்டு இராணுவ உத்யோகஸ்தர்களிறங்கி, சிரோமணியார் கல்லூரிக்குப் போனார்கள். சிரோமணியார் அவர்களை அன்போடு வரவேற்ற னர். அவர்களும் அவ்விருத்தப் பிராமணருக்கு வந்தனம் புரிந்து "ஐயா! நவாப் அவர்கள் இன்று சாயங்காலம் தங்கள் வீட்டிற்கு வந்து அப் பெண்ணைப் பார்ப்பார்" என்று சொன்னார்கள். அத

னக் கேட்ட அவ்வெளிய பிராமணர் பிரமித்து, ஒன்றுஞ் சொல் லக் கூடாதவராய்ச் சற்றுப் பொறுத்து மிக்க பிரயாசத்தோடு நாக்குளறலாக "அவர் மனம்போற் செய்யலாம்" என்றார்.

உடனே இரண்டு உத்தியோகஸ்தருங் கல்லூரியை விட்டு நீங்கினர். ஆனால், அவர்கள் சொன்னது சிரோமணியாருக்குக் கொடுந் துன்பமாயிருந்தது. தமது முதுமைப் பருவத்தில் மதத்தை யும் சாதியையு மிழக்க நேரிடுகின்றதே, அன்றியும், தம்முடைய பரிசுத்தமான கல்லூரியும் அவனுடைய பரிசத்தால் அசுத்தமாய் விடுமே என்னு மெண்ணத்தால் மனந் தளர்வுற்றனர். இத்தகைய காரியங்களெல்லாம் வைதீகர்களா யிருக்கும் பெரியோர்களால் பொறுத்தற்கூடுமோ? கூடாது. யாவும் சிரோமணியாருக்கு அந்த காரமாகத் தோன்றின. இந்தச் சங்கடத்திலிருந்தும் மீளுவதற்கு வழி காணாதவராய் வருந்தி, எல்லாம் வல்ல இறைவனைத் தொழத் தொடங்கினர்.

மாலைப்போதின் கண் ஆடம்பரமாக அலங்கரித்த அநேக படகுகள், நவாப் அவர்களையும் அவரது பரிவாரங்களையும் ஏற்றிக் கொண்டு பரிசுத்த கங்கைக்கரையைச் சேர்ந்தன. நவாப் அவர்கள் ஓரழகிய சிவிகையில் ஏறிக்கொண்டு, தமது பரிவாரங்கள் சூழ்ந்து வரத் தாம் சிரோமணியார் கல்லூரிக்குச் சென்றனர். முதியோ ராகிய சிரோமணியார், தாம் எதிர் பாராத இப்புதிய காட்சியைக் கண்டதும் திகைத்துப் போயினர். அவர் இதுவரையும் அரச ரோடேனும் அல்லது அரச அவையிலிருந்தேனும் பழகினவரல்ல ராதலால், நவாப் அவர்களை வரவேற்பது எப்படியென அவருக்குத் தெரியவில்லை, ஆதலால் தடுமாற்ற மடைந்தனர். ஏழைப் பார்ப் பனர் என்செய்வார்? அவர் அச்சத்தால் நடுக்கமுற்று, முற்றும் பேச்சற்றவ ரானர்.

அப்பெரியவர் அந் நிலைமையிலிருப்பதைக் கண்டு, நவாப் அவர்கள் "ஐயா! நீங்கள் எனக்காகச் சங்கடப்படவேண்டாம், நான் சிவிகையிலேயே உட்காருவேன். நீங்கள் என்னை வரவேற்பதிற் காக யாதொரு ஒழுங்குஞ் செய்ய வேண்டுவதில்லை. நீங்கள் சுகமாக உட்காருங்கள். நீங்கள் யாவராலும் நன்கு மதிக்கப்பட்டவர். நானும் உங்களைக் கௌரவித்துக் கனம்பண்ணுகிறேன்" என்றார்.

அவ்வாறு நவாப் அவர்கள் கூறிய நன்மொழிகளால் சிரோ மணியார் ஒருவாறு மனந்தேறிப் பிரயாசத்துடன் நவாபைப் பார்த்து "மகாப் பிரபு! நானொரு ஏழைப் பிராமணன், என்னை ஒன்றுஞ் செய்யாதிருக்கப் பிரார்த்திக்கின்றேன்" என்றார்.

அதனைக் கேட்ட நவாப் அவர்கள் "ஐய! நீரெனக்கு அதிக மாக ஒன்றுஞ் சொல்லவேண்டாம் எனக் கெல்லாந் தெரியும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
210358.

நீங்கள் அநாயாசமா யிருங்கள். உங்கள் வீட்டில் வசித்து வரும் பெண் என்னைப் பார்க்க விரும்புகின்றாள்; ஆதலாற்றான், நானிங்கு வந்தேன். தயைசெய்து அப் பெண்மணியை என்னிடம் வரச் செய்யுங்கள்" என்று கூறினார்.

அவளைக் கூப்பிடுவார் ஒருவரு மில்லை. சிறிது நேரத்தில் அவர்கள் பேச்சு முடிந்தது. உடனே ஒரு தெய்வ வடிவம், ஒரே இயல்பான மெல்லிய நடை நடந்து நவாபின் முன் வந்து தோன்றியது. அவள், அவளது பொன் போன்ற மேனியில் சிவந்த பட்டாடை தரித்திருந்தனள். அவளது மழை நேர் குழல் முழங்கால் வரை நீண்டு தொங்கியது. அவளது அழகிய நுதல் அட்டமிச் சந்திரனை யொத்து விளங்கியது, கரிய புருவமோ வில்லைப்போலும் வளைந்திருந்தது, அரி படர்ந்த கண்களோ மானை மருட்டுவன போலிருந்தன, நாசியோ குமுதம்பூவை யொத்திருந்தது; கபோலம் பளிங்கை யொத்திருந்தது, சிவந்த அதரம் கொவ்வையங் கனிபோன் றிருந்தது, கைகள் காந்தள் மலர்போலும், விரல்கள் பவளக் கிளை போலும், நகங்கள் கிளிமூக்கை யொத்தும், கால் விரல்கள் மஞ்சள் முளையை யொத்து மிருந்தன; அவள் முகத்தில் தெய்வ களை நிரம்பி யிருந்தது. அவளது சிவந்த இதழின்மேல் புன் முறுவல் பூத்து நின்றது. இவ்விதமாக நடைவனப்பும் முகவனப்பும் மேனி வனப்புங் கொண்ட பானுபாய் நவாபின் எதிரே தோன்றிப் பணிவுடன் தலை குனிந்து தரையைப் பார்த்தவண்ணம் நின்றனள். இவ்வற்புதமான அழகின் தோற்றத்தைக் கண்ட நவாபவர்களும் அவரது பரிவாரங்களும் வியப்படைந்தனர். ஒருவருக்கும் பேசக் கூடாமற் போயிற்று. உண்மையில் அவ ளழகே அவர்களெல்லோரையுந் துர்ப்பலமாக்கி விட்டது.

XVIII

பானுபாய் தனது பவளவாயைத் திறந்து பேசத்தொடங்கி, "படானிய வீரரே! என்னைத் தாங்கள் அழைத்துவரச் சொன்னீர்களா?" என்று கேட்டாள்.

அவ்வாறு கேட்ட அவளது தீங் குரலோசை ஆங்கிருந்தோ ரெல்லோர் மனத்தையும் திகைக்கப் பண்ணியது. அவர்களெல்லோருஞ் சிறிது நேரம் பதுமைபோல அசைவற்று நின்றனர். வீர தீரரான நவாப் அவர்களுக்கும், அவள் கேட்டதற்குப் பதிலுரைக்கக்கூடவில்லை. எல்லோருங் கலக்க மெய்தினர். மீண்டும் பானுபாய் நவாப் அவர்களைப் பார்த்து, "ஐயா! தாங்கள் என்னை அழைத்து வரச் சொன்னீர்களா?" என்றாள்.

அதற்கும் நவாப் அவர்கள் வாய் திறவாமல் சும்மா இருந்தனர் பிறகு, பானுபாய் "ஐய! தேச நிந்தையே உருவமான ஒரு பாத

கனே உங்கள் விஷயமாக என்னைச் சந்திக்கும்படி அனுப்பினீர்கள். அத்தூர்ப் புத்தியோடு பேசுவது என்னுடைய கௌரவத்திற்குக் குறைவான தென்று நான் உணர்ந்ததால், உங்களை நேரில் பார்க்க விரும்பினேன்" என்றாள்.

அதனைக்கேட்ட நவாப் அவர்கள், தம் மனம் தமது சுவாதீனத்தி லில்லாமல் அவளது மேனி வனப்பில் கட்டுப்பட்டுக்கொண்டமையால், அவர் மிக்க அவலமுற்று "எனக்கு என்ன கட்டளையோ அதனைப் பிரார்த்திக்கின்றேன்" என்றனர்.

"தாங்கள், என்னை உங்களுடைய பேகம் ஆக்கிக்கொள்ள வேண்டு மென்னும் விருப்பத்தை வெளி யிட்டீர்களா?" என்று கேட்டாள்.

"பெருமாட்டி! நீ அவ்வாறுவதற்கு மனமுவந்தா யானல்—" என்று நாக்குளறலாக மெதுவாகக் கூறினர்.

பானுபாய் மீண்டும் "ஐய! நான் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்றாள்.

அதற்கு நவாப் அவர்கள் "நீ பெண்களுக்குள்ளே பேரழகு வாய்ந்தவளென்றும், உன்னழகுக்கு நிகரான அழகுடைய பெண்களில்லை யென்றும், நியாயம், தர்க்கம், அரசாங்கம் முதலிய பல கல்வியிலும், உலக விவகாரங்களிலும், ஆழ்ந்த அறிவிலும், தைரியத்திலும், வல்லமையிலும் சிறந்தவளென்பது மாத்திரம் எனக்குத் தெரியும்" என்றார்.

"ஓ! ஓ! நீங்கள் கூறுவது, ஒருவர் ஒரு மனிதனிட மிருந்து ஏதோ ஒரு பயனை யடையக் கருதி, அவனெதிரே கூறும் முகமனுரையாகும். நானொரு பெண்தா னென்பதில் சந்தேகமே யில்லை. கால நிலைமை என்னை மாற்றி விட்டது. நான் காணப்பட்டபடி இனியும் பெண்ணல்ல. எவளை யடைவதற்காக அவளுடைய மாமனுராகிய சுசந்தராயைக் கொலை செய்யவும், அவரது தலை நகராகிய அநந்தபுரத்தைச் சாம்பராக்கவும் கட்டளை யிட்டீரோ, அந்தப் பானு பாய் தான் நான்" என்று வீர தீரத்தோடு கூறினாள்.

அவள் கூறியதைக் கேட்ட ஜனங்கள் ஒருவரோ டொருவர் குசு குசுவென்று பேசிக் கொண்டனர். நவாப் அவர்கள் முகம் பொலிவற்று வெளுத்தும், வாய் வறண்டும், பேசுவதற்கு நாவெழாமலும், உடம்பு அசைவற்றுக் கற்சிலை போலும் நின்று விட்டனர். அந்நிலைமையி லிருந்த நவாபின் முகத்தைப் பானுபாய் பார்த்து, "ஐய! நீங்கள் பயப்படாதீர்கள். நான் எண்ணி யிருந்தேனாயின் நீங்களும் உங்கள் பரிவாரங்களும் நொடிப்பொழுதில் கங்காநதியின் அக்கரையிலேயே தொலைந்து போயிருத்தல் கூடும். ஆனல், சிறிதும் பயன் தராத உயிர்க்கொலையை யுண்டாக்குவதற்கு எனக்கு

விருப்பமில்லை யாதலால், நான் 'உங்களுடைய பேகம் ஆவதற்கு சம்மதிக்கின்றேன்'' என்றாள்.

"பேகம் ஆவதற்குச் சம்மதிக்கின்றேன்" என்று சொன்னதைக்கேட்ட நவாப் அவர்கள் பெரிதும் மன மகிழ்ந்து "நீ என்னுடைய பேகம் ஆவது உண்மை தானோ" என்று வினவினார்.

"ஆம், நான் உம்முடைய பேகம் ஆவது உண்மை. ஏனெனின், அதனை விவரித்துச் சொல்லுகிறேன் கேளுங்கள். இப்போது என்னுடைய தேச ஜனங்களுள் ஒற்றுமை யில்லை. நெல்லிக்காய் மூட்டைகளா யிருக்கின்றனர். தேசாபிமான மில்லை. ஜனாபிமான மில்லை. ஏராளமான ஆடவர் மகளிர்கள் அறிவு விளக்கமின்றி அஞ்ஞானத்திற்கு அடிமை பூண்டிருக்கின்றனர். கல்வியறிவும் செல்வப் பெருக்குமுள்ள பிரபுக்கள், ஏழைகள் வயிறார உண்பதற்கில்லாமல் பசியால் வருந்துகின்றனரே யென்று இரக்கப்படுவதில்லை. அநேக ஜனங்களிடம் மத சம்பந்தமான துர் வழக்கங்களும் வீண் நம்பிக்கைகளு மிருக்கின்றன. அவர்களுக்குச் சுயமாக நல்லறிவு மில்லை, பிறர் சொல்லும் புத்தியையும் அவர்கள் கேட்பதில்லை. ஆதலால், தங்கள் தேசத்தை நீதியாகவும் தரும நீதியாகவும் ஆட்சி புரிவதற்குப் பக்குவமான மூதறிவு அவர்களுக்கு இல்லை யென்பதை நானறிந்து கொண்டேன். இன்னும், அவர்கள் ஒரு வல்லமையுள்ள அரசாட்சியின் கீழிருந்தே தீரவேண்டும். நீங்களிப்போது இத்தேசத்தி லிருக்கின்றீர்கள். இந்துக்களும் மகமதியர்களும் நேயமுற்றுச் சமாதானத்தோடு வாழ்ந்து வரக் கூடுமானவர்களாயின் உயிர்ச் சேத முண்டாவதற்கு அவசிய மிராது. இக்காரியத்தை உங்கள் மூலமாகவே செய்து முடிக்க விரும்புகின்றேனாதலால், உங்களுடைய பேகம் ஆவதற்கு ஆசை கொள்ளுகின்றேன்" என்றாள் பானுபாய்.

"பெருமாட்டி! நான் உனக்கு அடிமையாக விருப்பேன். என்னுயிர் போகாதபடி யென்னைக் காத்தல் வேண்டும்"

"ஆயின், நான் உங்களிடத்தில் தெரிவித்துக்கொள்ளச் சில அபிப்பிராயங்களுண்டு. அவைகட்குத் தாங்கள் இணங்குவீர்களாயின்"—

"தெரிவிக்கப் பிரார்த்திக்கின்றேன். எனக்கென்ன கட்டளை? இக்கணமே உத்தரவு பிறப்பிக்கின்றேன்."

"ஐய! என்னுடைய தாய் தந்தையரையும்—என்னுடைய கணவரையும்—கொன்ற ஒருவரை, கணப்போதில் அல்லது ஒரு நாளில் என் மனங் காதலிக்கக்கூடுமோ வென்பதை நீங்களே எளிதில் அறிந்து கொள்ளக்கூடும்"

"அவ்வாறு செய்யும்படி நான் ஒருக்காலும் உத்தரவிடவில்லையே"

"நீங்கள் உத்தரவிடாம லிருக்கலாம்; ஆனால், இவ்வித பழி பாவத்துக் கஞ்சாத குலை நடுக்கமான துன்பத்தை உங்களுடைய பரிவாரங்கள் செய்திருக்கலாம். இத்தகைய துன்பங்களை யெல் லாம் நான் ஒரு நாளில் மறந்துபோக முடியாது. எனக்கு ஓராண்டு தவணை வேண்டும். அவ்வோராண்டு கழிந்த பின்னர் என்னுடைய விரதம் முடிவு பெறும், அப்போது நான் உம்முடைய பேகம் ஆவேன்."

அதனைச் செவியேற்ற நவாப் அவர்கள் பதிலளிக்கத் தாமதித் தனர். உடனே பானுபாய் "நீங்கள் என்மீது சந்தேகப்படவேண் டாம். நான் முன்னம் உங்களுக்குத் தெரிவித்த என்னபிப்பிராயங் களுக்கு ஒத்து வருவீர்களாயின், நாளைக்கே உங்களுடைய அந்தப் புரத்திற்கு வந்து சேர்ந்து உங்கள் பேகம் போலிருப்பேன்; ஆனால், ஒன்று மாத்திரம் உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். அஃதாவது நாலொரு இந்துப்பெண் போலவே தனி அறையில் வசிக்கவேண்டும். நான் அங்கு வந்து சேர்ந்த அந்நாள் முதல் ஓராண்டு கழியுமளவும் நீங்கள் என் சரீரத்தைத் தொடுதல் கூடாது. அதன் பிறகு தான் நானுங்கள் பணிவிடைக்காரியாவேன்" என்றாள்.

அதற்கு நவாப் அவர்கள் சிறிதுநேரம் ஒன்றும் பேசாதிருந்து, பிறகு, "நான் அதற்குச் சம்மதியா விட்டால்?"

"நீங்கள் என்னை அடையமாட்டீர்கள்" என்று பெண் சிங் கம் போல தைரியமாகக் கூறினாள்.

"உன்னை பலாத்காரமாகக் கொண்டுபோவேனானால்?"

"நீர் வீணாகக் கொல்லப்படுவீர். ஆனால், நான் அவ்வித வீண் கொலைக்கு ஊக்கங்கொடுக்க மாட்டேன். என்னை நானே கொலை செய்து கொள்வேன். இவ்வுடன்படிக்கையை முன்ன தாகவே என் மனத்தில் தீர்மானித்துக்கொண்டேன்" என்று சிறிதும் அச்சமின்றிக் கூறினாள்.

அதனைக் கேட்ட நவாப் அவர்கள், பேரறிவும் பேராற்றலு முடைய அவ்வனிதையால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை யென் பதை அறிந்துகொண்டார். வரவர, அம் மோகனாங்கியின் கட் டழகிலே மயங்கி, தம்மறிவு தம்முடைய சுவாதீனத்தி லில்லாத படி கருத்தழிந்தார். அதனால் அவர் அவளது சொற்களுக்குக் கீழ்ப் படிந்தவராய் "உன்னுடைய நிபந்தனைகளுக் கெல்லாம் நான் ஒத்துக்கொள்ளுகின்றேன்" என்றார் நவாப்.

உடனே பானுபாய் "இன்னொரு வேண்டுகோள்" என்றாள்.

"அதனையுஞ் சொல்லப் பிரார்த்திக்கின்றேன்."

"கேளுங்கள். என்னுடைய குருவும் அவரது பத்தினியும் என்னை வளர்த்தவர்கள். அவர்கள் என்னை அடிக்கடி பார்ப்பதற்

கில்லா திருப்பார்களாயின், அவர்கள் பெரிதும் மனம் வருந்துவார்கள்; ஆதலால் நான் அப்போதைக்கப்போது அவர்களைப் பார்ப்பதற்கு இங்கு வருவேன்."

"நீ நினைக்கும்போ தெல்லாம் இங்கு வரலாம்" என்றார்.

"ஆனால், நானுங்களுடைய பேகம் ஆவதற்குத் தடையாதுமில்லை" என்று பணிவுடன் பதிலுரைத்தாள்.

"பெருமாட்டி! நான் உன்னடிமை யாவேன்."

"தாங்கள், உங்கள் வேத புத்தகத்தின்மீது உறுதி மொழி கூறுதல் வேண்டும்" என்றாள்.

உடனே நவாப் அவர்கள் தம் பரிவாரங்களி லொருவனை அழைத்துக் "கொரான்" புத்தகத்தைக் கொண்டு வரச் சொன்னார்.

அப்போது அங்கிருந்துவந்த உத்தியோகஸ்தர்களி லொருவன் நவாபினிடம் என்னுண்டவரே!

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு"—என்று அறிவாளர் கூறியிருக்கின்றனர்; ஆகலின், தாங்கள் செய்யப் போகுங் காரியத்தைச் சற்று ஆழ்ந்து யோசித்துப் பாருங்கள்" என்று கூறினான்.

அதனைக் கேட்டதும் நவாபுக்குக் கோபமுண்டாகி அவ்வுத்தியோகஸ்தனை நெட்டித்தள்ளி "நீ போய்க் கொரானைக் கொண்டுவா" என்றார்.

அதனைப் பார்த்த பானுபாய், அவ்வுத்தியோகஸ்தன்மீது இரக்கங்கொண்டு "ஐயா! நீங்கள் கொரான்மீது சத்தியஞ் செய்தல் வேண்டா. ஜெயவீரரான உங்கள் வாய்மொழியே எனக்குப் போதுமானது" என்று சொல்லி, அவ்வுத்தியோகஸ்தனை நவாபின் கோபத்தினின்றுந் தப்புவித்தாள். பிறகு, அவள் நவாபைப் பார்த்துப் "பிரபுவே! என்னுடைய சகோதரர்கள் நாளைய சாயங்காலம் உங்களுடைய தலைநகருக்கு என்னை அழைத்து வருவார்கள். அங்கே உங்கள் அரண்மனைக்கு என்னைக்கொண்டு போவதற்கு, இறங்கு துறை யண்டை தயைசெய்து எல்லா ஏற்பாடுகளுஞ் சித்தஞ் செய்து வைக்கக்கோருகிறேன்" என்று சொல்லி வீட்டுக்குள் போய்விட்டாள்.

பிறகு; நவாப் அவர்கள் சிறிதுநேரம் அங்கேயே உட்கார்ந்திருந்து, சிரோமணியார் கல்லூரியைவிட்டுத் தமது நகருக்குத் திரும்பிப் போயினார்.

விதியின் பயனே பயன்

(நா. சு. கோபாலய்யங்கார் எழுதுவது)

நீர் மேற் குமிழி போன்ற நமது நிலையற்ற வாழ்வில் 'விதிவலிது' என்பதை மட்டும் ஈண்டு வற்புறுத்த விரும்புகிறோம்.

நல்லறமாகும் இல்வாழ்க்கையி லீடுபட்ட சதிபதிகளி ருவருள் கோடானு கோடி தவஞ்செய்து அரசமரத்துப் பிள்ளையாரை அடிதொழுது முடிவணங்கி மக்கட் பேறடைய வருந்தி நிற்போர் அனேகர். அன்னோர் சில சமயங்களில் ஆண் மகவு கோரியவிடத்துப் பெண் குழவியும் பிறப்பதுண்டு. "இட்டதெல்லாம் பயிரல்ல பெற்றதெல்லாம் பிள்ளையல்ல" என்பதுபோல் பிறந்த ஆண் குழந்தை வளர்ந்து பெயரும் புகழும் பெரிதெனப் பெற்றுக் குலவீர திலகனாகவிளங்குவா னென்றெண்ணிய விடத்தில் குழந்தை பிறந்ததும் இறந்ததும் ஒருவிதமாகவே முடிவு பெறலாம். அல்லது அக்குழந்தை மரண பரியந்தம் நீடித்த பிணியால் நித்ய தரித்திரத்துடன் நித்ய கண்டம் பூரணாயுசாகவும் வாழ்வதுண்டு. வேறு சில இடங்களில் பெற்றெடுத்த பெரியார் உற்ரு ருறவினர் எவருமறியா ஏழைக் குழந்தைகள் தெய்வ பலம், பூர்வ ஜன்ம பூஜா பலன் முதலியவை பெற்று ஊரார் மெச்சிடும் அரிய குணங்கள் பலவும் பெற்று விளங்கும் புண்ணிய சீலர்களாகி உன்னத பதவி யடைந்து நிற்பதையும் நாம் காணலாம்.

பள்ளிப் பிள்ளைகள் அரைக் கணம் விடாது ஓதியுணர்ந்தும் தேறுதல் பெறாது தயங்கி நிற்பதும் அவர்களுள் சிலர் விதிப் பயனென நினையாது எண்ணாத எண்ணமெலா மெண்ணி நெஞ்சங் கலங்கி உயிர் துறப்பதுவும் சம்பவிக்கத் தக்கவையேயாம். அது விடுத்து மூளை மண்டலம் காலியானதே காரணமாகக் கொட்டாவி விட்டு வருடமுழுவதும் தெம்மாங்கு பாடித் திரிந்தோரில் சிலர் மற்றையோர் செய்த புண்ணியத்தின் பலனாக வெறுங் கனவிலும் கேட்டிராதபடி தேறுதல் பெறுவதும் உலக வழக்கமேயன்றி நூதன மன்று.

வர்த்தக இனத்தாரும் தத்தமது விருத்திக்கேற்றவாறு இங்குமங்கும் ஓடியாடித் திரிந்தலைந்து கற்றுத் தேர்ந்த தந்திரோபாயங்களனைத்தையு முருட்டித் திரட்டி யதின் நிமித்தம் அதிக ஊதிய மடைய எதிர்பார்த்திருந்ததற்கு நேர் முரணாகக் கஷ்டங்களிடையே அவ்வாண்டில் நஷ்டங்களு மேற்படுவதுண்டு.

விதியின் பயனே பயன்

"குலம்வேண்டு மென்றிருப்பார் குலத்துள்ளார்
கல்வியினுற் குறையா ஞானப்
பலம் வேண்டு மென்றிருப்பார் தந்தைமார்
பரந்த பெருஞ் செல்வமுள்ள
தலம் வேண்டு மென்றிருப்பார் தாய்மார்கள்
யௌவனமு மழகுஞ் சார்ந்த
நலம் வேண்டு மென்றிருப்பார் நாறுகுழல்
கன்னிமார் நலத்தின் மிக்கார்."

என்ப போலும், இன்று "கோடீஸ்வரன் நாளை கோவணாண்டியாவதும் கூழுக்கலைந்தவன் பல்லக்கேறி யுலவுவதும் அழகிய பெண்ணுக்கும் கருப்புநிற விகாரக் கணவ னமைவதும், குமரனையே கோரிய பெண் கிழவனைக் கணவனாக அடைவதும், பணக்காரனை மணந்ததால் கர்வமும் பொறாமையும் கொண்ட ஒருத்தி தொல் வினைப்பயனால் அமங்கலியாகிப் பணத்திற்கும் மோசம்வந்தடைந்து சோற்றுக்குத் தாளம் போடு வதையும் நாம் காண்கிறோம்"—இவையாவும் 'தொல்வினைப் பயன்' அல்லது "தாந்தாமுன் செய்த வினை தாமே யனுபவிப்பர்-பொன் விளைத்தால் பொன் விளையும்-இட்டார்க் கிட்டபடி" என ஒன்றையே குறித்திடுவது அங்கையங் கனி யாகிறது.

நாம் அனைவரும் புனர் ஜன்மம் ஒன்றுண்டு என்று மட்டும் நம்புங்கால் போன ஜன்மத்தில் செய்த பாவத்தை இப் பிறப்பி லனுபவிக்கிறோம். மறு பிறப்பிலாவது நல்லது கிடைக்க நல்லதை எண்ணிக் கூறிச் செய்திடுவோம் என்றும் இந்த ஜன்மத்தில் பூர்வஜன்ம புண்யபலனாக பெறும்பேறு பெற்றிருப்பின் இதைப் போலவே மறுஜன்மத்திலும் அடையும் எண்ணத்துடன் நல்லதைச் செய்வார்கள். நல்லதைச் செய்ய நாள் நக்ஷத்திரம் நாழிகை ("சுபஸ்ய சீக்ரம்" என்ப போல) வேண்டியதில்லை. நாளை வரும் நமனை நாம் அறியோமாதலின் நற்செய்கை யின்றே செய்து நாராயணனுசி பெறுவது உங்கள் விருப்ப மல்லவா?

தாவர ஆஸ்பத்திரி

இங்கிலாந்தில் தாவர ஆஸ்பத்திரி ஒன்று சமீபத்தில் திறக்கப் பட்டிருக்கிறது. அங்கு செடிகொடிகளுக்கு ஏற்படும் வியாதிகள் குணப்படுத்தப் படுகின்றனவாம். வாழைகளுக்கு மனிதரைப்போல் சுவாசமிடவேண்டுவது அவசியமென்றும் இல்லையேல் அவைகள் மரித்துப்போகும், அல்லது நோய் வாய்ப்படுமென்றும் கண்டுபிடிக்கப்பட் டிருக்கின்றது.

தமிழின் பெருமையும் அதன் தற்கால நிலைமையும்

(ஏ. ராஜம் எழுதுவது)

தமிழின் பெருமை :—இவ்வுலகில் மாட்சிமை வாய்ந்த பாஷைகளிரண்டே. அவை வடமொழியும் தமிழ் மொழியும். தமிழென்னும் பதத்திற்கு இனிமையானது என்று பொருள். சிலர் தென்மொழி யென்னும் பதம் தமிழெனத் திரிந்த தென்பர். அது எவ்வாறாயினும் தமிழ் மாண்பு வாய்ந்ததோர் பாஷை யென்பதை மறுத்துக் கூற எவராலும் இயலாது. தமிழில் சிறப்பு 'ழ'காம் மிக இனிய ஓசையுடன் வழங்குவது பற்றி இனிமையான தெனப் பொருள் கூறினர்.

தமிழ் சிவபிரானல் அகத்திய முனிவருக்கு உபதேசிக்கப்பட்டது. இவ் விஷயத்தைப் பின்வரும் நிரூபணங்களால் அறிந்து கொள்ளலாம்.—1. தொல்காப்பிய நூலாசிரியராகிய தொல்காப்பியர் அகத்தியரது சீடர் என்பதைத் தமிழ்க் கற்றவர்களில் பெரும் பான்மையோர் உணர்வர். ஆதலால் அகத்திய முனிவர் தமிழில் மிக்க வல்லமை பூண்டவரென்னும் விஷயம் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் நன்கு விளங்குகின்றது.

மேலும் காஞ்சிப் புராணத்தில் :—

" வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாம் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்
கடல்வரைப் பி னிதன்பெருமை யாவரே கணித்தறிவர்"

என்னுஞ் செய்யுள் வழங்குவதாலும் தமிழ் சிவபிரானல் அகத்திய முனிவருக்கு உபதேசிக்கப்பட்டது என்னும் விஷயம் உறுதியாகின்றது.

2. அநேக தெய்வீக சம்பந்தமான புராணங்களும், இதிகாசங்களும், பெருங் காப்பியங்களும், அரும் பாடல்களும் நமது தாய் பாஷையாகிய தமிழில் இயற்றப்பட் டிருக்கின்றன.

உதாரணமாக :—கம்பராமாயணம், பெருந்தேவனர் பாரதம். வில்லிப்புத்தூரார் பாரதம், முதலிய இதிகாசங்களும்; அரிச்சந்திர புராணம், ஸ்காந்த புராணம், காஞ்சிப் புராணம் முதலிய புராணங்களும்; சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்ற ஐம்பெருங் காப்பியங்களும்; தேவாரம், திருவாய்மொழி முதலிய பாடல்களும் நமது தாய் பாஷையில் இயற்றப் பட்டிருக்கின்றன.

3. தமிழில் வல்ல புலவர்களில் அநேகர் எல்லாம் வல்ல இறைவ னருளினாலேயே தமிழில் மிக்க வல்லமை பூண்டு அவனது திருமலரடிகளையே எப்பொழுதும் தியானித்து அவனது அனந்த கல்யாண குணங்களைப்பாடி அவனருள் பெற்றவர்கள், உ-ம்:—திருநாவுக்கரசு நாயனார், ஞானசம்பந்தர், திருமங்கை யாழ்வார், பட்டிணத்துப் பிள்ளையார், மாணிக்கவாசக சுவாமிகள், குமரகுருபர சுவாமிகள் முதலியோர்கள் அவனது அருளைப்பெற்று அதனால் தமிழில் வல்லமை பூண்டவர்களே.

4. தமிழில் அநேக தெய்வீக சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

உ-ம். 1. சமண மதத்திற் சேர்ந்து தருமசேனர் எனனும் பெயர் பூண்டிருந்த திருநாவுக்கரசர் தமக்கு வந்த சூலையை நீக்கிக் கொள்ளும் பொருட்டு வீரட்டானேசுவரர் சந்நிதியில் நின்று அவர்மேல் ஒரு பதிகம் பாட அவரது சூலை நோயும் தீர்ந்தது. அப்பதிகம் மிக்க இனிமையா யிருந்தமையாலும், பதிகத்தினமைப்பு மிக அழகா யிருந்தமையாலும், கடவுள் மனமுவந்து "இனி உன்பெயர் நாவுக்கரசு என்று வழங்குக" என்று அசரீரியாய்க் கூறினார்.

2. மற்றும் இவர் பிற்காலத்தில் அப்பூதி யடிகளது இல்லத்திற்கு விருந்தினராய்ச் சென்றிருந்த காலத்து, அப் பூதியடிகளது குமாரன் வாழையிலை அரியப்போய், அவ்விடத்தில் விஷ நாகம் ஒன்று தீண்ட அதனால் அவன் இறந்ததைத யுணர்ந்து அவனது சவத்தை அவ்வூர்ச் சிவாலயத்தின் முன்னிலையில் கிடத்திக் கடவுள் பேரில் "ஒன்று கொலாம்" எனத் தமிழில் ஒரு பதிகம் பாடினார். அப்பதிகம் பாடி முடிந்தவுடன் சவமாய்க் கிடந்த அப்பூதியடிகளது குமாரனும் நித்திரை நீத்தெழுந்தவன்போல் உயிர்பெற்றெழுந்தான்.

3. திருஞான சம்பந்தருக்கு மூன்றாவது பிராயத்திலேயே பார்வதிதேவி, அவர் தந்தையைக் காணாது அழுதுகொண்டிருக்கும் பொழுது, பிரத்தியட்சமாய்த் தனது ஞானப் பாலூட்டி அவரைத் தேற்றி அருள் செய்தாள். அது காரணம் பற்றியே அவரும் தமிழில் வல்லமை பூண்டார்.

4. ஸ்ரீவைகுண்டத்தில் பிறந்த குமரகுருபர சுவாமிகள் ஐந்து வயது வரை ஊமையா யிருக்கக் கண்டு அவருடைய பெற்றோர்கள் அவரைத் திருச்செந்தூர் முருகக் கடவுள் சந்நிதியில் கொண்டுவிட, சிறிது காலத்தில் அவருக்கு ஊமையும் சிறிது சிறிதாக அறவே நீங்கிற்று. ஊமை நீங்கவே அவர் முருக னருள் பெற்று, சுப்பிரமணிய சுவாமியின் பேரில் 'கந்தர் கலிவெண்பா' என்ற வெண்பாவைப் பாடினார். இவ்வாறு ஈசுவரானுக் கிரகத்தி

ஞல் தமிழில் வல்லமை பூண வேண்டுமே யானல் இதன் மகிமையை என்னென்று சொல்வது?

5. கச்சியப்ப சிவாசாரியார் குமரகோட்டத்து முருகக் கடவுளைப் பூசித்து வரும் நாளில் முருகன் அவரது கனவிற் ரோன்றி கந்த புராணத்திற்குத் தமிழில் அடியெடுத்துக் கொடுக்க அவரும் அவ்வாறே கந்த புராணம் பாடி யருளினர். இவர் கந்த புராணத்தை நாள்தோறும் நூறு பதிகங்கள் வீதம் பாடி, இரவில் ஏடு எழுத்தாணிகளைக் குமரன் திருவடிகளின் கீழ் வைத்து விட்டு நித்திரை செய்வார். விடியற்காலையில் எழுந்து பார்க்கும் பொழுது அதில் தெய்வாதீனமாய் அநேக திருத்தங்கள் இருக்கக் காண்பார்.

6. சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தை இயம்புங் காலையும் சிவபிரான் "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுத் தருளினர். இவ்வாறு முருகக் கடவுளும் சிவபிரானுமே தமிழை விரும்பின ரென்ருல் இதன் மாண்பை உரைத்தலும் வேண்டுமோ?

7. மற்றும் திருவிளையாடற் புராணத்தில் :—

"தொண்டர் நாதனைத் தூதிடைவிடுத்தது முதலை
உண்டபாலனை யழைத்தது மென்பு பெண்ணுருவாக்
கண்டதும் மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்டமிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்"

என்று கூறி யிருத்தலாலும் தமிழ் தெய்வீகம் வாய்ந்த தென்பது நன்கு விளங்குகின்றது.

8. மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் தெய்வீகம் வாய்ந்த இரு சாணளவினதாகிய ஒரு சதுரப் பலகை மெய்ப்புலவர்கட்கு மாத்திரம் ஒரு முழம் வளர்ந்து அவர்கள் உட்கார்வதற் கிடங் கொடுத்து வந்ததென்பதைத் தமிழ் கற்றவர்கள் அறிவார்கள். இப்பலகை சிவபிரானல் சங்கத்தார்க் களிக்கப்பட்டது. இவ்வாறு தெய்வமே தமிழை ஆதரித்து வந்ததென்ருல் இதன் மாண்பை விளக்க வேறு சாட்சியங்களும் வேண்டுமோ?

இவ்வித பெருமைகள் வாய்ந்த தமிழ், பாண்டிய, சோழ, அரசர்களால் மிகவும் ஆதரிக்கப்பட்டு வந்தது. பாண்டிய சமஸ்தானத்தில் புகழேந்தி முதலிய வித்துவான்களும் சோழ சமஸ்தானத்தில் ஒட்டக்கூத்தர் முதலிய வித்துவான்களும் இருந்தனர். சோழ பாண்டியர்கள் தமிழ்ப் புலவர்கட்குப் பரிசு முதலியன அளித்து வந்தனர்.

கடைசியாக நம் தாய் தந்தையர் நமது குழந்தைப் பருவத்தில் நமக்குக் கற்பித்ததும் தமிழே, அவர்கள் நம்மைத் தாலாட்டினதும் தமிழிலேயே, அன்னவர்க்கு நாம் மழலைச் சொற்களியம்பி இன்ப மூட்டினதும் தமிழிலேயே தான்.

தமிழின் பெருமையும் அதன் தற்கால நிலைமையும்

தமிழின் தற்கால நிலை:—இவ்வாறு நம்மை வளர்த்ததும், சோழ பாண்டிய அரசர்களால் ஆதரிக்கப் பெற்றதும், தெய்வீகம் வாய்ந்ததுமான நமது தாய்ப்பாஷை தற்காலத்தில் அடைந்திருக்கும் தாழ்வை என்னென்று சொல்வது!

தற்காலத்தில் தமிழ் செவ்வையாய் பேசுவோர் சிலரேயாவர். அநேகர் சாதாரணமாய்த் தமிழ் பேசும்பொழுது அனுவசியமாய் ஆங்கில வார்த்தைகளைக் கலந்து பேசுகிறார்கள். இதற்குக் காரணம் அவ்வாங்கிலப் பதங்களைக் கலந்து கொள்ளாமலிருத்தல் தங்களுக்குக் கௌரவ குறைச்சல் என்ற நினைப்பே. இவ்வாறு பேசுவதால் காலக்கிரமத்தில் அவ்வாங்கில மொழிகட்குச் சரியான தமிழ் மொழிகள் தெரியாமற் போய்விடும். அப்படிப் பேசி வந்ததின் பயனாகத் தற்காலத்திலேயே சில தமிழ்மொழிகள் உலக வழக்கத்தில் நசித்தே போய்விட்டன என்று சொல்லலாம். உ-ம், பெஞ்சு, ரோடு முதலிய பதங்கட்குச் சரியான பதங்கள் அநேகர்க்குத் தெரியாமற் போய்விட்டது. பெஞ்சு=விசுப்பலகை, ரோடு=பாதை. ஆனால் செந்தமிழில் பேசவேண்டுமென்று கூறவில்லை. பெஞ்சு, ரோடு முதலிய வார்த்தைகளைக் கலந்து பேசிக்கொள்ளலாம். ஏனெனில் அவை நாட்டு வழக்கத்தில் நன்றாக வேரூன்றி விட்டன. ஆயினும் நம்மாலியன்ற மட்டும் கலப்பின்றிப் பேச முயலவேண்டும். அவ்வாறல்லாமல் "ஸார் ஹாவ் பாஸ்டு பைவ் ஆச்சோ, ரிவருக்குப் போய் ப்ளெசன்டாய் மூன்லயிட் வரும்வரை கன்வெர்ஸ் பண்ணிண்டு இருந்துவிட்டு ஹவுஸ்க்குத் திரும்பலாமே" என்று பேசுதல் நமக்குத் தமிழினிடத்துள்ள அபிமானக் குறைவை அங்கை நெல்லிக்கனிபோல் தெற்றென விளக்குகின்றது. இதை இவர்கள் உலக வழக்கத்தில் பின்வருமாறு பேசலாகாதோ? "என்ன ஐயா! $5\frac{1}{2}$-மணியாய் விட்டது; ஆற்றிற்குப் போய் அங்கே நிலா வரும் வரை பேசிக்கொண்டிருந்துவிட்டு வீட்டிற்குத் திரும்பி வரலாமே." இவ்வாறு கலந்து பேசுவதால் இவர்கள் தாங்கள் பேசும் பாஷைகளைக் கொல்பவர்களாகின்றார்கள். இவ்வாறு பேசுவதால் இவர்களுக்கு இரு பாஷைகளும் தெரியாதென்று ஏற்படுமே தவிர அதனால் கௌரவம் சிறிதும் ஏற்படாது. ஆகையால் ஒருபொழுதுமே பாஷைகளை அதிகமாகக் கலந்து பேசக் கூடாது.

அந்தோ தெய்வத்தினால் அளிக்கப்பட்ட நமது தாய்ப்பாஷையைக் கவனியாது விலக்கிவிடுதல் தானாக வந்த சீதா தேவியைக் காலாலுதைத்துத் தள்ளுவது போன்றல்லவோ இருக்கின்றது.

இன்னும் பாடசாலைகளில் தமிழின் நிலையைச் சற்றுக் கவனித்தால் அங்கு தமிழ்ப் பண்டிதர்கட்குக் குறைந்த சம்பளம்தான்

கொடுக்கப்பட்டு வருகிறது. அதற்குக் காரணம் தமிழ்ப் பண்டிதர்கள் கணக்கற்றிருக்கின்றார்க ளென்பதா? இல்லவே யில்லை! இதற்குக் காரணம் அரசாங்கத்தார், பரீட்சைகளில் தமிழில் தேர்ச்சி குறைந்திருந்தாலும் ஆங்கிலத்தில் அல்லது மற்றைய இனங்களில் தேர்ச்சி அதிகமாயிருந்தால் பரீட்சையிற்றேறி விடலாமென்று விதியிட்டிருப்பதுவே. அதனுல் மாணவர்களுக்குத் தமிழில் ஒருவித அசிரத்தை யுண்டாவதுடன் தமிழ்ப் பண்டிதர்களுக்குரிய கௌரவமும் போய் விடுகிறது.

மேலும் உத்தியோகம் வகிக்க வேண்டுபவர்கள் ஆங்கிலங் கற்றவர்களா யிருக்க வேண்டுமென்னும் அவசியத்தினுல் "தம் தாய் பாஷை தூய் பாஷையா யிருக்க அதை நாய் பாஷையாக மதிப்பவர் எத்தனைபேர்; தம் சொந்தபாஷை தமக்குத் தகுந்த பாஷையா யிருக்க அதை இகழ்ந்த பாஷையாகக் கருதுபவர் எத்தனைபேர்; தாம் உதித்த பாஷை மதித்த பாஷையா யிருக்க அதை மிதித்த பாஷையாகக் கருதபவர் எத்தனைபேர். அந்தோ இது கொடுமையினும் கொடுமை, கேட்டிலும் கேடு மதி கேடு!" இவ்வாறு நாம் நம் தாய் பாஷையை அவமதித்து அன்னிய பாஷையை மதிப்பது நம்மை ஐயிரு திங்கள் அணியுதரத்திற் சுமந்து ஈன்றெடுத்த தாயை இல்லாள் வந்ததும் அவளது நடனங்களில் ஈடுபட்டு மதியிழந்து அன்னையை ஓட்டினுலும் ஓட்டலாம்; அகமுடையாள் முகங் கோணலாகாது என்றெண்ணி அவளது வார்த்தைகட் கிசைந்து அன்னையைக் கவனியாது விலக்கி வைக்கும் சில மதியீனர்களுடைய செய்கைகளைப் போன்றல்லவோ இருக்கின்றது. சுருங்கச் சொல்லின் நம் நாட்டாரது மதியீனத்தினுலும், பாஷாபிமானக் குறைவாலும் நம் தாய் பாஷை இவ்வித நிலை யடைந்தது.

ஆதலால் பாஷாபிமானமுடைய செல்வர்கள் தமிழை ஆதரிக்க வேண்டும். அவர்கள் தமிழில் மிகத் தேர்ச்சி பெறும் மாணவர்கட்கு உபகாரச் சம்பளம் (Scholarships) பரிசு முதலியன அளித்தல் வேண்டும். இவ்விதமாகத் தமிழை ஆதரிப்பவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தார்களே. செல்வர்கள் பலர் ஒன்று கூடித் தமிழ்க் கல்விச் சாலைகள் நியமித்துத் தமிழ் புலவர்கட்கு உயர்ந்த சம்பளங்கள் கொடுத்து, ஏழை மாணவர்கட்குத் தக்க வசதிகள் செய்து கொடுத்து அவர்களுக்குச் சம்பளமின்றித் தமிழ் கற்பிக்க வேண்டும். தமிழில் நல்ல வியாசங்கள் எழுதுவோர்க்குப் பரிசு முதலியன அளித்தல் வேண்டும்.

மற்றைய சாதாரண ஜனங்களும் தங்களா லியன்றமட்டும் தமிழைச் செவ்வையாகப் பேச வேண்டும். தாங்கள் எழுதுவனவற்றை யெல்லாம் தமிழி லெழுத வேண்டும். மாணவர்களும்

தங்களா லியன்றமட்டும் தமிழை நன்ருய்க் கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு நம் நாட்டார்கள் செய்தால் நம் தாய் பாஷை முன்னிருந்த பெருமையை யடையுமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

சுபம்

எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

முத்து பிறக்கு மிடங்கள்.

(அ. ச. அருணசல ரெட்டியார் எழுதுவது)

முத்தானது—கோமேதகம், புட்பராகம், வைரம், வைடூரியம், மரகதம், நீலம், மாணிக்கம், பவளம் முத்து என்ற நவரத்தினங்களில் ஒன்று.

முத்து பிறக்கு மிடங்கள் இருபது என்று நம் முன்னையோர் தெரிவித்திருக்கின்றனர்.

"தந்திவராக மருப்பிப்பி பூகம் தழை கதலி
நந்துசஞ்சலம் மீன்றலைகொக்கு நளினமின்னுர்
கந்தரம் சாலி கழைகன்னல் ஆவின்பல் கட்செவிகார்
இந்துடும்புகரா முத்தம் ஈறும் இருபதுமே."

அதாவது—யானைத்தந்தம், பசுவின் பல், பன்றிக்கொம்பு, சிப்பி, சங்கு, நத்தை, மீன், முதலை, நாகம், உடும்பு, கொக்கு, சந்திரன், மேகம், தேங்காய், கரும்பு, வாழை, கமுகு, மூங்கில், செந்நெல், தாமரை ஆகிய இருபது இடங்களாம். நம் முன்னேர்களைக் கேவலமாய் எண்ணும் இக்காலத்தவர் அம் முன்னேரின் அறிவின் நுட்பத்தைக் கேட்டு வியப்புறும லிருப்பாரா? இதனைமட்டு மல்ல, இதைப்போன்ற இன்னும் ஆச்சரியமும், அபூர்வமுமான எவ்வளவோ நுட்பங்களைக் கண்டறிந்தவர் நம் முன்னையோர். ஆனல் அவர்கள் தலை முறையில் பிறந்தவர்களாகிய நாம் இக்காலத்தில் புதிதாய்க் கண்டு பிடிக்காவிட்டாலும் இப்படிப்பட்ட வற்றை நேரில் கண்டவர்களாகவும் கூட இல்லை. இப்படிப்பட்ட கேவல இடங்களிலிருந்தும் முத்து பிறக்குமோ என்பது இக்கால நவீன நாகரீகத்தில் கற்றறிந்த மூடர்களின் பெருஞ் சந்தேகம். தேங்காயிலிருந்து முத்து பிறக்குமென்பதற்கு எவ்வளவோ சான்றுகள் பத்திரிகை வாயிலாய் அறியக் கிடக்கின்றன.

1886-ம் ஆண்டில் ஸிலிபஸ் என்னும் வட நாட்டில் ரீடல் என்பவர், தேங்காய்ச் சதையுள் முட்டையின் உருப்போன்ற ஒரு சிறிய முத்தைக் கண்டெடுத்தார்.

மேற்கு இந்தியத்தீவுகளின் அதிபதியாகவிருந்த சர் டேனியல் மாரீஸ் என்பவர் இம் முத்து விஷயத்தைப்பற்றி அடியில் கண்டவாறு தெரிவிக்கிறார். அதாவது சுமார் 25 வருடங்களுக்கு முன் ஒஷதி சாஸ்திரங்களில் பெயர் வாங்கினவராகிய ரம்ப் என்பவர் டஸ்கனி நாட்டுச் சீமானுக்கு தேங்காயின் முத்துப் பதித்த மோதிரம் ஒன்றை அனுப்பினார். இரண்டு தேங்காயின் முத்தைப் பார்த்து அவைகளின் பிரமாணம், உருவம், பிரகாசம் முதலியவற்றைப் பற்றி தமது டைரியில் வரைந்திருக்கிறார் என்று தெரிய வருகிறது. பிலிப்பைன் தீவில் இதைப்பற்றி அநேகர் கேள்விப்பட்டதுண்டு. ஆனால் அது பார்ப்பதற்குக் கிடைத்ததில்லை. சீன தேசத்தார் இம் முத்துக்களை உயர்வாக மதிக்கிறார்கள். ஏனென்றால் அநேக விதமான வியாதிகளும் பிசாசுகளும் இவற்றினால் விலகிப் போகின்றனவாம்.

ஆகையால் அரசர்கள் நவரத்தினங்களில் இதை ஒன்றாக மதித்து அதிக விலை கொடுத்து வாங்கி ஆபரணங்களில் பதித்துத் தரித்துக் கொள்ளுகிறார்கள்.

இதற்கு ஒரு விதமான நீல வர்ண முண்டு. இதைக் "கலாவா" என்று சொல்லுவார்கள். சில வருடங்களுக்கு முன் சுயமான தேங்காய் முத்து ஒன்றை இங்கிலாந்திற்கு ஹிக்ஸன் என்பவர் கொண்டு போனார். அங்கே யிருக்கிற கியூ பட்டணத்திலுள்ள கவர்ண்மென்ட் தோட்டத்திலுள்ள கண் காட்சி சாலையில் அது வைக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் வெளுத்து முட்டை வடிவு போல் இருக்கிறது. இஃது எவ்வாறு தேங்காயின் சதையில் உண்டாகிறதென்று ஒருவர்க்கும் தெரியவில்லை.

கரும்பில் முத்து விளைவதற்கும் ஒரு கதை கூறப்படுகிறது.

முன் ஒருகாலத்துப் பாண்டியன் அவையிற் பொருளீட்டுவதற்குச் சிறந்த வழி யாதென்று கேள்வி பிறந்தது.

அப்போது ஒரு வணிகன் எழுந்து "வாணிபஞ் செய்தலே பொருளீட்டுதற்குச் சிறந்த வழி" என்று உரைத்தனன்.

அச்சமயத்தில் ஓர் வேளாளன் அதனை மறுத்து "பயிர்த் தொழில் செய்வதே பொருளீட்டுதற்குச் சிறந்த வழி" என்றுணர்த்தினன்.

அதைக் கேட்ட அரசன் அவ்விருவருக்கும் சிறிது பொருள் தந்து "இதனைக் கொண்டு நீங்கள் கூறிய வழியால் பெரும் பொருளாக்குக" என்று விடுத்தான். பின்னர் சிறிது காலஞ்

சென்று அரசன் தன் தூதரை நோக்கி "அவர் என்ன நிலையி லிருக்கின்றனர்" என வினவினன். அத்தூதர் வணிகன் வாணிகத் தாற் பெருஞ் செல்வம் திரட்டியுள்ளானென்றும், வேளாளன் செழிப்பாக ஒரு கருப்பந் தோட்டம் பயிர் செய்திருக்கிறனென் றும் சொன்னார்கள். அரசன் அதனைக் கேட்டு அவர் நிலையை நேரே அறியக் கருதி அவ்விருவரும் வாழும் ஊரிலுள்ள கொற்ற வையின் திருவிழாவிற்குச் சென்றிருந்தபொழுது முதலில் வணி கனை அழைப்பித்து வினவினன். அவன் தனக்குக் கொடுத்த பொருளைப் பதின் மடங்கு பெருக்கி யிருப்பதாகச் சொன்னன். பின்பு வேளாளனை அழைப்பித்துக் கேட்க, அவன் அங்கிருந்தே தன் கருப்பந் தோட்டத்தைக் காட்டி "இதுவே என் பொரு ளீட்டம்" என்று கூறினன். அரசன், "இது செழித்த தோட் டமே யாயினும் வணிகன் ஈட்டிய பொருளிற் பத்திலொரு பங்கிற் கேனும் இணையாகாது" என்றான்.

அதற்கு வேளாளன், "வணிகனுடைய பொருள் இதன் விலையிற் பத்தி லொரு பங்கிற்கும் இணையாகாது" என்று கூறி னன்.

அதனைக் கேட்ட அரசன் வேளாளனை இகழ்ந்துரைக்க, அவன் தன் தோட்டத்திலிருந்து ஒரு கரும்பைக் கொணர்ந்து அரசன் முன்னிலையில் அடித்து முறித்தனன். அதிலிருந்து முத்துக்கள் தெறித்து விழுந்தன. அரசன் அம் முத்துக்களை நோக்கி ஒவ்வொன்றும் மிக்க விலை பெறுமென்பதை யறிந்து மகிழ்ந்து அவ் வேளாளனுக்கு முத்து என்றும், அக்கரும்படித்த இடத்திற்கு முத்தடித்த களமென்றும், அங்குள்ள அம்பிகைக்கு முத்து நாச்சியம்மனென்றும், அந்நாட்டுக்கு முத்து நாடென்றும் பெயர் புனைந்தனன்.

இன்னும், சிப்பியினின்று முத்து விளைகிறதென்பது இலங் கையிலும் தூத்துக்குடி முதலிய இடங்களிலும் முத்துக் குளிப்பு நடத்திச் சிப்பிகள் கடலினின்று எடுப்பதிலிருந்து அறியக் கிடக் கிறது. முத்து விளைவைப்பற்றி இன்னும் அறிந்தவர்கள் வெளி யிடுவார்களானல் அவர்களுக்கு மிக்க நன்றி செலுத்துவோம்.

சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு

நமது லக்ஷ்மியின் நான்காம் ஆண்டு வருகிற ஆகஸ்டு மாதம் பிறக்கப் போகிறது. ஆகையால் சந்தா நேயர்கள் சந்தாத் தொகையை ஜூலை மாதம் 15உக்குள் மணியார்டர்மூலம் செலுத்தி விடக் கேட்டுக் கொள்கிறோம். மேற்படி தேதிக்குள் தொகை யனுப்பாத சந்தா நேயர்களுக்கு இப்பொழுது நடந்துவரும் மல ரின் 12-ம் இதழ் (Vol 3. No 12. மலர் 3. இதழ் 12) V.P. யில் அனுப்பப்படும். பணம் அனுப்பிய நேயர்களுக்கு இதழ் 12-ம் நான்காம் ஆண்டின் முதல் இதழ் முதலும் சாதாரண புக் போஸ் டாக அனுப்பப்பட்டு வரும். நான்காம் ஆண்டுக்கு லக்ஷ்மியை வரவழைக்க இஷ்டமில்லாதவர்கள் தயைசெய்து ஒரு கார்டு மூலம் மேற்படி ஜூலை மாதம் 15உக்குள் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்துவிடக் கேட்டுக்கொள்கிறோம். அவர்களுக்கு 12-ம் இதழ் மட்டும் சாதாரண புக் போஸ்டில் அனுப்பி நான்காம் ஆண்டு முதல் இதழிலிருந்து நிறுத்தி விடப்படும். அப்படி மேற் கண்ட தேதிக்குள் மணியார்டராவது கார்டாவது அனுப்பாத நேயர்கள் லக்ஷ்மியை V.P.யில் பெற்றுக் கொள்ளலா மென்ற இஷ்டத்துடன் இருக்கிறார்கள் என்று கருதப்பட்டு V.P. மூலம் சந்தாத் தொகை ரூ. 2. ஸ்டாம்பு செலவு அணா 2. ஆகத் தொகை ரூ. 2—2—0 க்கு லக்ஷ்மியை அனுப்புவோம். அது நேயர்களுக்கு கிடைக் கும்பொழுது தபாலாபீஸார் அவர்கள் சட்டப்படி இரண்டணாக் கமிஷன் சேர்த்து மொத்தமாக ரூ. 2—4—0 வசூலிப்பார்கள். சந்தா நேயர்கள் தொகையை மணியார்டரில் அனுப்பினால் இரண்டணா மணியார்டர் கமிஷன் சேர்த்து ரூ. 2—2—0 தான் ஆகும், இதிலிருந்து லக்ஷ்மியை V.P.யில் பெறுவதைவிட மணியார் டர் செய்வதனால் இரண்டணா லாபம் கிடைக்கிறது. அப்படி நேயர்களுக்கு லாபம் கிடைப்பது எங்களுக்குச் சந்தோஷத்தையும் கஷ்ட மில்லாமையையும் கொடுக்கிறது.

வெளி தேசங்களிலுள்ள சந்தா நேயர்களுக்கு புக் பாக்கெட் V. P. கிடையா தாதலால் அவர்கள் ஆகஸ்டு மாதம் 25உ-க்குள் எங்களுக்கு கிடைக்கும்படியாக சந்தாத் தொகை ரூ. 2—8—0 மணியார்டரில் அனுப்பிவிடக் கேட்டுக் கொள்கிறோம். அப்படி கிடைக்கா விட்டால் நான்காம் ஆண்டு முதல் லக்ஷ்மி நின்றுவிடும்.

மானேஜர்,

லக்ஷ்மி ஆபீஸ்.

மூன்று கனிகள்

சில நூற்றுண்டுகளுக்கு முன் பக்தாத் நகரத்தில் ஒரு வர்த்தகன் இருந்தான். அவன் மனைவி மிகவும் அழகானவள். புருஷன் மீது அவள் குறை கூறுவதே யில்லை. அவனைச் சகல விஷயங்களிலும் சந்தோஷப்படுத்தி அவனை இன்பமாக வாழச் செய்வதையே அவள் தனது கடமையாகக் கொண்டிருந்தாள். அவனும் தனது மனைவியை மிகவும் பிரியத்துடன் நேசித்து வந்தான். அவள் சொன்ன விஷயம் எதனையும் அவன் தட்டுவதில்லை.

இவ்வாறு அந்த வர்த்தகனும் மனைவியும் இரு தலைப் புள்ளின் ஓர் உயிர்போல இன்பமாக வாழ்ந்து வரும்பொழுது மனைவி திடீரென்று வியாதி யடைந்தாள். வர்த்தகன் அவளை மிகுந்த கவலையுடன் கவனித்து வந்தான். அவள் விரைவில் சுக மடைவதற்கு வேண்டிய முயற்சிகளை யெல்லாம் சிரத்தையுடன் செய்தான். ஒரு நாள் அவ் வர்த்தகனின் மனைவி அவனிடம் "எனக்குச் சில ஆப்பிள் பழங்கள் வேண்டும்; நீண்ட நாளாக எனக்கு அந்தப் பழங்களின்மேல் ஆசை யிருந்துகொண் டிருக்கிறது. சீக்கிரமாக அவை எனக்குக் கிடைக்காவிட்டால் எனக்கு ஆபத்து நேரிடும் போலத் தோன்றுகிறது" என்று சொன்னாள். உடனே வர்த்தகன் அவ்வூரில் உள்ள சந்தைகள் எங்கும் தேடினான்; கடைகள் எங்கும் விசாரித்தான். அவன் ஒரு பழத்திற்கு ஒரு பவுன் கொடுக்கத் தயாராயிருந்தும் அங்கு ஒன்றும் கிடைக்கவில்லை. பின் தெய்வச் செயலாக மேற்படி வர்த்தகன் ஒரு வயது சென்ற தோட்டக்காரனைக் கண்டான். அவன் "நீர் நாடெங்கும் தேடினாலும் அந்தப் பழம் கிடைப்பது அரிது; ஆனால் பஸ்ரா நகரத்திலுள்ள "கலிபா" தோட்டத்தில் மட்டும் அது கிடைக்கும்," என்று சொன்னான். இதனைக் கேட்டவுடன் தனது அருமை மனைவியின் விருப்பத்தை எவ்வாறாவது நிறைவேற்ற வேண்டுமென்று கருதிய மேற்படி வர்த்தகன் ஒரு தேசாந்திரிபோல வேஷந் தரித்துத் தனது மனைவியிடம் விடைபெற்றுக் கொண்டு பஸ்ராவுக்குப் புறப்பட்டான். வர்த்தகன் மிகவும் விரைவாகச் சென்று பஸ்ரா நகரம் போய்ச் சேர்ந்தான். உடனே அங்குள்ள தோட்டத்திற்குச் சென்றான். அங்கே அபூர்வமாக மூன்று ஆப்பிள் பழங்கள் தான் கிடைத்தன. அப்பழங்களை ஒவ்வொன்றுக்கு ஒரு பவுண் வீதம் மூன்று பவுன் கொடுத்து வாங்கிக் கொண்டு பதினைந்து தினங்களுக்குள் திரும்பி விட்டான். அவன் வீட்டுக்கு வந்தவுடன் தனது மனைவியிடம் மேற்படி பழங்களைக் கொடுத்தான். ஆனால், அவளது ஆவல் முன்னரே போய்விட்டது.

ஆனாலும் அவள் அப்பழங்களை வாங்கித் தனது சமீபத்தில் வைத்திருந்தாள். பின்னும் அவள் வியாதி தீராமலே யிருந்தது. அதனால் அவ்வர்த்தகன் அவளைச் சௌக்கியப்படுத்துவதற்கு இன்ன வழியென்று அறியாது சும்மா விருந்தான்.

இவ்வாறு சில நாள் கழிந்தது. ஒரு நாள் வர்த்தகன் கடை வீதியிலுள்ள தன் கடையில் உட்கார்ந்து கொண்டிருந்தான். அப்பொழுது சகல பொருள்களும் விற்கும் அவ்வீதியில் அவலக்ஷண மிகுந்தவனும், ஒல்லியாய் வளர்ந்தவனும் கன்னங் கரேலென்று கருத்தவனுமான ஓர் அடிமை தன் கையில் ஓர் ஆப்பில் பழத்துடன் போவதைக் கண்டான். அது அவன் நீண்ட தூரம் பிரயாணஞ்செய்து பஸ்ராவிலிருந்து கொண்டு வந்த மூன்று பழங்களில் ஒன்றாயிருந்தது! உடனே வர்த்தகன் அந்த அடிமையை அழைத்து, அப்பா! இந்தப் பழம் உனக்கு எங்கே கிடைத்தது? என்று கேட்டான். அடிமையானவன் புன்னகையுடன் "இந்தக் கனியை எனது காதலி எனக்குக் கொடுத்தாள். இன்று காலையில் யான் அவளிடம் போயிருந்தேன். அப்பொழுது அவளிடம் மூன்று ஆப்பில் பழங்கள் இருந்ததைக் கண்டு, அவை ஏது என்று கேட்டேன். அவள் நல்லவரான எனது புருஷன் எனக்காகப் பதினைந்து நாள் யாத்திரை செய்து இந்தப் பழங்களை கொண்டு வந்தார் என்று சொன்னாள். பின் நான் அவளிடம் விடைபெற்று வந்தபொழுது எனக்கு ஒரு பழத்தை வெகுமதியாக அளித்தாள். அதுதான் இது" என்று சொன்னான்.

இந்த விருத்தாந்தத்தைக் கேட்டவுடன் வர்த்தகனுக்கு அது மிகுந்த உண்மையென்று தோன்றியது. உடனே அவன் எழுந்து கடையைப் பூட்டிவிட்டு ஆத்திரத்துடன் வீட்டுக்கு விரைந்து சென்றான். வீடு போனவுடன் மனைவியின் அறைக்குச் சென்று ஆப்பில் பழங்கள் மூன்றும் இருக்கின்றனவா என்று பார்த்தான். இரண்டுதான் இருந்தன ; ஒன்றைக் காணவில்லை, உடனே மனைவியைக் கேட்டான். படுக்கையி லிருந்த அவள் பழங்கள் வைத்திருந்த இடத்தைக் கஷ்டத்துடன் திரும்பிப் பார்த்து அங்கே இரண்டு பழங்கள் மட்டும் இருப்பதைக் கண்டு, அத்தான், ஒரு பழம் என்ன ஆயிற்றோ எனக்குத் தெரியவில்லை என்றாள். மனைவி இவ்வாறு சொன்னதைக் கேட்டவுடன் அந்த அடிமை நம்மிடம் சொன்னது வாஸ்தவமா யிருக்கவேண்டும் என்று உறுதி செய்து கொண்டான். உடனே 'நமது மனைவி ஓர் அடிமையைக் காதலித்து நம்மை வஞ்சிக்கும் கள்ளியா' என்ற எண்ணத்தால் அவன் உள்ளத்தில் கோபமும் விசனமும் பொங்கின. கோபத்தீ தீப்போற் கொதிக்க அவன் உடனே தனது வாளை உருவித் தனது மனைவியை ஒரே வெட்டாய் வெட்டிவிட்டான். பின் அவன் அவள் பிரேதத்தை ஒரு பெட்டியில் அடக்கஞ் செய்து

இருட்டியவுடன் தனது தோளில் சுமந்துகொண்டு போய் டைக்ரிஸ் நதியில் விட்டுவிட்டான்.

வர்த்தகன் இந்தக் கொடுஞ்செயலைச் செய்து விட்டு வீட்டுக்குத் திரும்பிவந்த பொழுது அவன் மூத்த பிள்ளை வாசலில் அழுது கொண்டு நின்ருன். "என் அழுகின்ருய்?" என்று வர்த்தகன் கேட்கச சிறுவன் கூறுகின்ருன். "அப்பா, நீர் அம்மாவுக்காகக் கொணர்ந்த மூன்று ஆப்பில் பழங்களில் ஒன்றை நான் இன்று காலையில் அவளுக்குத் தெரியாமல் எடுத்துக் கொண்டேன். தம்பியுடன் வீதியில் விளையாடிக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்திற்குமுன் நெட்டையாக வளர்ந்த ஓர் அடிமை அந்தப் பழத்தை என் கையிலிருந்து பிடுங்கிக்கொண்டு போய் விட்டான். நான் அவன் பின்னே ஓடினேன். பழத்தைக் கொடு என்று கேட்டதுடன் அந்தப் பழம் வியாதியாயிருக்கும் எங்கள் அம்மாவுடையது என்றும் எங்கள் அப்பா அதற்காகப் பதினைந்து நாள் பிரயாணஞ் செய்து கொண்டுவந்தார் என்றும் சொன்னேன். என்ன சொல்லியும் அவன் கேளாமல் பழத்தைக் கொண்டுபோனுன். பின்னும் நான் அழுதுகொண்டே அவன்பின் போய்க் கொண்டிருந்தேன். உடனே அவன் திரும்பி வந்து என்னை அடித்துவிட்டு விரைவாக ஓடிவிட்டான். அப்பா! அம்மா வருத்தப்படுவாள், நீர் இந்தச் சங்கதியை அவளிடம் சொல்லக் கூடாது. அதற்காகவே அரைமணி நேரமாய் இங்கேயே நின்று காத்துக்கொண் டிருக்கிறேன்" என்று சொல்லி விட்டுப் பின்னும் மிகுதியாக அழத் தொடங்கினுன்.

மகன் சொன்ன விருத்தாந்தத்தைக் கேட்டவுடன் வர்த்தகனுக்குத் தலையில் இடி விழுந்ததுபோ லிருந்தது. என்ன பாதகம் செய்தோம் என்று ஏங்கினுன். அவன் உள்ளத்தில் துக்கத் தீ பற்றி யெரிந்தது. நாம் மகா பாதகம் செய்து விட்டோமே என்று கவலை யடைந்தான். வஞ்சக மிகுந்த ஓர் அடிமை எனது மகன் சொன்ன வார்த்தைகளால் அறிந்து சொன்ன தந்திர வார்த்தைகளை மெய்யென நம்பி, ஐயோ! எனது ஆருயிர்க் காதலி, அன்புடைச் செல்வம், இன்புடைத் துணைவியை வாளுக்கு இரையாக்கினேனே" என்று எண்ணி யெண்ணி நெஞ்சகம் புண்ணுனுன். "கண்ணாட்டியை வதை செய்தேனே" என்று கண்ணீர் ஆருய்ச் சொரிந்தான். "அழியாத பத்தினியைக் கொன்ற பழியை நான் எவ்வாறு தீர்ப்பேன்" என்று வருந்தினுன். அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வருமா? பின், தான் தீர விசாரியாது அறிவீனத்தால் செய்த தீவினைக்காகப் பெரிதும் வருந்தித் தனது மக்கள் தக்க வய தடைந்தவுடன் அவர்களுக்கு விவாகம் முதலிய சுப கருமங்களைச் செய்து தனது ஆஸ்திகளை அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து அவர்களை ஒற்

றுமையாக வாழுமாறு வேண்டும் புத்திமதிகளைச் சொல்லிவிட்டுத் தனது மனைவியை அநியாயமாகக் கொன்ற பாவம் நீங்குமாறு துறவு நிலையடைந்து அல்லாவைத் தொழுது வாழ்ந்தான். தீர விசாரித்துத் தெளிந்து கொள்ளாது எதனையும் திடீரென்று செய்து விடுதலால் பெருங் கேடுகள் விளையும் என்பது இந்தக் கதையால் தெளிவாக விளங்கும்.

கடவுள் கோபமுள்ளவரா?

வண்ணை நகர், ஸ்ரீ. க. வைத்தியலிங்க பிள்ளை எழுதியது

ஆசிரியப்பா

சாகர முடுத்த தரணியின் மீது
பண்டுமூன் றுலகும் படைத்தமெய்க் கடவுள்
தன்கட் டளைக்கீ ழமையா தவர்களைக்
கோபங் கொண்டு கொடியதண் டனைகள்
செய்வா ரென்றுந் தீமைசெய் தவர்களின்
ஏழுசந் ததியா ரிடத்தினு மப்பழி
வாங்குவ ரென்றும் மனத்தினில் எரிச்சல்
கொள்வரென் றுஞ்சிலர் கூறுகின் றார்கள்!
வேறுஞ் சிலபேர் மேதகு மிறைவனை
அல்லும் பகலு மடியிணை வழுத்தவும்
ஒன்றின் மேலொன் றுயுவப் பற்ற
அல்லலை யெமக்கே யளித்திடு கின்றார்!
அன்பிலாத் துட்ட ரவரைக் கனவிலும்
நினையா திருக்கவு நிகரிலாச் செல்வம்
அனைத்தையுங் கொடுத்து அருள்புரி கின்றார்!
பதியா யுள்ளவ ரிங்ஙனம் பக்ஷ
பாதமாய் நடத்துத னீதியதாகுமோ?
இவர்கண் ணில்லாக் கடவுளோ! என்று
இயம்பொணு மொழியா லேசிடு கின்றார்!
இதுபெருந் தேவ தூஷண மென்பதைத்
தெரியா திவர்கள் செப்புகின் றார்களே!
அப்பரம் பொருளை யடியவர் கிருபா
சமுத்திர மென்றுந் தயாநிதி யென்றும்
சங்கரன் சச்சி தானந்த னென்றும்

கடவுள் கோபமுள்ளவரா?

போதமெஞ் ஞான பூரண னென்றும்
இக்கருத் தமைந்த எண்ணிலாப் பெயரால்
முனிவிலா னெனமறை மொழிந்திடுகின்றதே,
கருணைக் குறையு ளாகிய கடவுளை
கோபமுள் ளவரெனக் கூறுதன் முறையோ?
கடல்கொதித் திட்டாற் கலந்து சமன்செய
நீணில மீது நீரகப் படுமோ?
பிள்ளையெக் குற்றஞ் செய்யினும் பெற்ற
தாயா னவளதைத் தான்முனிந் திடுவளோ?
மசகந் தன்னை வயமா வெகுளுமோ?
செப்புமிம் மொழியைச் சிதடர்கூற் றென்று
மேதகு சான்றோர் விளம்புவ ரன்றே!
இங்ஙன மவர்முனி வற்றவ ரென்றால்
அகிலத் துள்ள ஆன்மகோ டிகளின்
சார்ந்துள வநேக தாரதம் மியங்கள்
எதனுல் வந்த தென்று ஆக்ஷேபந்
தொடுக்கி லதற்கு விடைசொல் லுங்கால்
கடவு ளிடத்தறக் கருணையா மென்றுங்
கருதிடு முயர்மறக் கருணையா மென்றும்
உத்தம மாமிரு கருணைக ளுள்ளன
அன்புளோ ரிடத்தறக் கருணையுந் தீவினை
இயற்றியோ ரிடத்தின் மறக்கரு ணையையும்
பாவித் தவர்களைப் பரிந்துகாக் கின்றூர்
அவைக ளிரண்டுங் கருணையா மன்றே?
அதுவெது போலென லறைகுவன் கேண்மின்!
சன்மார்க்க ராக வொழுகுந் தனையரை
மாசிலாப் பிதாமன மகிழ்ச்சியோ டணைத்து
தித்திப் பாகிய சிற்றுண் டிகள்பல
கனிவர்க் கங்கள் கருதிய பொருள்கள்
எவற்றையு மீந்து ரக்ஷித்தல் போலவும்
வம்போ டிணங்கி மரியாதை யின்றி
துட்டராய்த் திரியும் மட்டிகளான
பிள்ளைக டமக்குப் பிரம்படி கசையடி
நெற்றியிற் கல்லை வைத்து நிறுத்துதல்
ஆகிய தண்டனை யனைத்தையு மன்பாற்
புரிந்தவர் தமக்குப் புத்தி புகட்டுதல்
போலவு முடம்பிற் புறப்படுஞ் சிலந்தி
எனுங்கட் டொருவற் கெய்திய காலை
இரண வைத்தியன் சத்திர மிட்டதை
அறுத்துக் காரமிட் டாற்றுதல் போலவும்

கண்க ளிரண்டினுங் காசநீர் விழ்ந்து
பார்வை குன்றிப் பழுதடைந் திட்டபின்
நயன வைத்தியன் நண்ணியக் கண்களை
ஊசியாற் குத்தியும் படலத்தை யுரித்தும்
செப்பொணு வேதனை கொடுக்குஞ் சிகிச்சைகள்
புரிந்துகண் சுகமுறச் செய்வது போலவுஞ்
சதாசிவ னாகிய தற்பர மூர்த்தி
பரம துட்டரின் பவப்பிணி யகல
நரகத் திட்டு வருத்திய நால்வகைத்
தோற்றமா யிந்தத் தொல்லுல கத்தினிற்
பின்னமில் லாது பிறக்கவும் பண்ணி
முன்புரி வினைகள் முழுதுந் தொலைந்தபின்
நித்தியா னந்த முத்தியை யீகிறார்
என்பதை யுணரா திவர்தங் கடவுள்
முனிவால் வருத்துவ ரெனமொழி கின்றார்
இவ்வுரை யுய்தியில் பாவமா மன்றோ ?
சகோதர ரேயான் சாற்றிடக் கேளீர்
தெரியா மையினால் நாங்கள்செய் திட்ட
பலவினைக் காகப் பராபர மூர்த்தி
கோபமு மெரிச்சலு மெங்கண்மேற் கொண்டு
எல்லையில் காலம் நரகத்தி லிட்டு
வருத்துவா ரென்ற வார்த்தைகே ளாமல்
உஞற்றிய பவத்துக் கொத்ததண் டனையே
செய்வா ரென்பதைச் சிந்தையி லுணர்ந்து
எம்மைப் போலப் பிறந்திறந் திட்ட
நரவணக் கத்தையெந் நாளு மகற்றி
அந்த மிலாத அரனடி
சிந்தனை செய்து சிவகதி சேர்மினே.

தலை ரோமம்

(அரசன் எழுதுவது.)

அநேகம் ஆண் பிள்ளைகள் பெண்களைப் போல நீண்ட தலை ரோமம் இடுப்பு வரையிலும் வளர்த்துக்கொண்டு வாசனை எண்ணெய்கள் தேய்த்து, சீவி, சிடுக் கறுத்து அலங்கார தோரணை யுடன் இருக்கிறார்கள். மற்றும் சிலர் அம்மாதிரி யிருக்க ஆவல்

கொள்ளுகிறார்கள். அப் பேர்ப்பட்ட ஆண் பிள்ளைகள் எவ்வளவு தைரியத்துடன் இருக்கிறார்கள் என்று பார்த்தால் பிடித்துத் தள்ளினால் பத்துக் குட்டிக்கரணம் போடத் தயாராயிருக்கின்றார்கள். அவர்கள் உச்சியில் கொஞ்சம் தலை ரோமம் வைத்துக் கொண்டிருக்கும் பெரியவர்களைப் பார்த்துக் கேலி செய்கிறார்கள் பலர். காலணுக் குடும்பி, அரையணுக் குடும்பி இது என்ன பழைய காலத்துப் பைத்தியமாயிருக்கிறதே என்று பரிகசித்துத் தங்களை கௌரவப் படுத்திக் கொள்கிறார்கள். அம்மாதிரி பரிகசிப்பவர்கள் காலணு அரையணுக் குடும்பி வைத்திருப்பவர்கள் ஆறுதலுக்கும் மூளைக்கும் தைரியத்திற்கும் சமானமாக மாட்டார்களென்பது திண்ணம்.

ஏனென்றால் மனிதர்கள் ஜாஸ்தி ரோமம் தலையில் வைத்துக் கொள்வதனால் சூரியஉஷ்ணமானது ஜாஸ்தியாக அவர்கள் மண்டை வாயிலாக தேக முழுவதும் பரவி விடுகிறது. சூரிய உஷ்ணம் ஒருவனுக்கு ஜாஸ்தி தேகத்தில் ஏறினால் அவன் மிகுந்த பலஹீனமாவதுடன் அவன் மூளையும் சக்தியற்றுப்போகிறது. எவ்வளக் கெவ்வளவு சூரிய உஷ்ணம் தேகத்திற்கு ஏறாது இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது. எப்பொழுதும் கருப்பு உஷ்ணத்தை ஜாஸ்தி இழுக்கும் என்பது எல்லோரும் கற்ற விஷயமே. ஆகையால் நம் மண்டையி லிருக்கும் ரோமம் கருப்பாகையால் நாம் ஜாஸ்தி ரோமம் வளர்த்து வைத்திருந்தால் உஷ்ணம் ஜாஸ்தி ஏறும். இந்தக் காரணத்தைக் கொண்டே ஐரோப்பியர்கள் தலையில் அணிந்து கொள்வது வெள்ளை நிறமான தொப்பியும் தேகத்தில் அணிந்துகொள்வது தூய்ய வெள்ளை ஆடைகளுமே. ஆகையினால் மண்டையில் ரோமமே இல்லாமலிருப்பது அவசியமாகிறது. அப்பொழுது உஷ்ணம் தேகத்திற்கும் மூளைப்பாகத்திற்கும் ஏறபடாது மூளை விருத்தியாகும், தேகம் திடகாத்திரமாகி நான்கு பக்கமும் அலைந்து திரிந்து மிகவும் சம்பாத்தியம் செய்ய சௌகரியமாயிருக்கும். ஆனால் பெண்களுக்கு தலையில் ரோமம் இருக்கலாம். ஏனெனில் வெளியில் சம்பாத்தியம் செய்வதற்குப் போகிறது அவர்கள் அல்ல. ஆண்கள் தான். நம் பெரியோர்கள், தலையில் கொஞ்சங்கூட ரோமம் இல்லாவிட்டால் பார்வைக்கு அந்தக் குறைவாக இருக்குமே என்று கொஞ்சம் மூளைக்குச் சம்பந்தமில்லாத இடமாகிய உச்சியில் வைத்துக் கொள்ளுகிறார்கள். அத்துடன் அந்த ரோமங்களும் உஷ்ணத்தை இழுத்து விடுமே என்று நன்றாக வெளுத்த துணியினால் தலைக்குட்டை கட்டிக்கொள்ளுகிறார்கள். இதனால் பெரியோர்கள் அதிக புத்தி தீக்ஷண்ய முடையவர்களாக இருக்கின்றார்கள்.

தற்கால நாகரீகப்படி நம்மவர்கள் வேஷக் வைத்து வேஷாக் செய்கிறார்கள். அந்த வேஷக் எப்படி என்றால் பின் பக்கம் குறைத்தும் மூளை பாகமாகிய முன் பக்கத்தில் ரோமம் ஜாஸ்தியாகவும்

வைத்துக்கொள்ளுகிறார்கள். இது ஐரோப்பியர்களின் பாவனையை நாடுவது: ஐரோப்பியர்கள் தங்கள் தேசம் குளிர்ந்த தேசமானபடியால் உஷ்ணம் அவர்களுக்கு தேவை யிருக்கிறது. ஆனபடியால் அவர்கள் தங்கள் தேச நிலைமையைப் பொருத்து ஒரு அங்குல நீளம் முன்னேயும் கால் அங்குல நீளம் பின் பாகத்திலும் வைத்துக் கொள்ளுகிறார்கள். நாம் நம் தேச கால நிலைமையைப் பொருத்தல்லவோ செய்ய வேண்டியது. நம் தேசம் சதா சூரிய மண்டல பாகத்திலிருப்பதனால் வெளியில் செல்லும் ஆண்களுக்கு மண்டையில் மயிரே இருக்கக்கூடாது. வழுக்கு மொட்டையாகப் போவது அந்தக் குறைவாக இருக்குமே, மற்றவர்கள் கேலி செய்வார்கள் என்று நினைக்கலாம். அந்த மற்றவர்களும் எல்லோருமே மொட்டையாக இருக்கவேண்டு மென்பது இதன் கருத்து. அப்படி எல்லோருமே மொட்டையானால் கேலி பரிகாசம் என்பவைகள் ஏற்படாது. அத்துடன் வெள்ளைத் துணியால் தலைப்பாகை ஒன்றும் அணிந்துகொள்ள வேண்டியது முக்கிய கடமை.

பெரிய யோகிகளும் சாமியார்களும் சந்நியாசிகளும் மொட்டை அடித்துக்கொள்வதும் இவ்விதமான காரணங்களைக் கொண்டுதான். கோவிலுக்குப் போகும் சமயம் தலை மொட்டையாக இருக்க வேண்டு மென்று கூறப்படுகின்றன. ஆனால் இது சாதாரணமாக எல்லாக் கோவில்களிலும் நடப்பது இல்லை. இப்பொழுது சில ஜனங்கள் திருப்பதி செல்லுகிறார்கள். திரும்பி வரும் சமயம் அவர்களைப் பார்த்தால் பெரிய சாமியாராகக் காணப்படுகிறார்கள். திருப்பதி சாமி என்ன மொட்டை அடிக்கச் சொல்லுகிறாரா, அது ஒன்று மில்லை. திருப்பதி போய்வந்த பிறகு ஜனங்கள் "ஆஹா எவ்வளவு ஆரோக்கியமா யிருக்கிறது; திருப்பதி போய் வந்த பிறகு. சாமி உடன் ஆரோக்கியத்தைக் கொடுத்துவிட்டார் பார்" என்று சொல்லிக் கொள்கிறார்கள். திருப்பதி போய் மொட்டை அடிப்பதைத் தங்கள் இருப்பிடங்களிலே அடித்தாலும் அந்த ஆரோக்கியம் ஏற்படத்தான் செய்யும்.

நம் இந்துக்கள் யாவரும் தினம் கோவிலுக்குப் போகவேண்டு மென்பது ஒரு முக்கிய கடமை. தினம் போகும் சமயமெல்லாம் மொட்டையாகப் போகவேண்டு மென்பது கருத்தாகையால் எப்பொழுதுமே மொட்டையாகவே இருக்கவேண்டு மென்பது இதன் கருத்தாகிறது.

இம்மாதிரி அறிவிற் சிறந்த நம் முன்னோர்களால் கையாளப் பட்டதாகியதனாலும், மேற்சொன்ன காரணங்களாலும் தலையில் ஆண்மக்களுக்கு ரோமமே இல்லாதிருக்க வேண்டு மென்பது, உறுதியாகி விடுகிறது.

தங்க பதக்கம் பெற்றது

வெள்ளி பதக்கம் பெற்றது

என் வயது 14

பாரததேசத்து

பெண்மக்களின் உயர்ந்த பரிமள இரண்டு ஆபரணங்கள்

அத்தர்க்ளின் ராஜா

ஓட்டோமோஹினி

உயர்ந்த மணமும், சுகமும் கொடுக்கக்கூடியது

விலைகள் :—ரூ. 2–0–0 1–4–0 0–12–0
0–10–0 0–8–0 0–2–0

வாஸனை கார்டுகள் 1-க்கு 0—1—0
டஜன் 0—10—0.

ரோபினியா ஆயல்

அத்தர்களின் ஊற்று

கூந்தலுக்கு மிகவும் நல்லது. தலையில் உண்டாகும் சுண்டு முதலியவைகளைப் போக்கி கூந்தலை மிருதுவாகவும் அடர்த்தியாகவும் வளரச்செய்து மூளைக்குக் குளிர்ச்சியுண்டாக்கும்.

புட்டி 1-க்கு ரூ. 1–0–0. 3 புட்டி ரூ. 2–4–0.

பாகிங், தபால் செலவு வேறு.

ஸக்ஸஸ் ஆப் இந்தியா அத்தர் அழகிய கட் கிளாஸ் புட்டி.

கைக்குட்டைக்கு உயர்ந்த பரிமள அத்தர் 1 oz. புட்டி ரூ. 2—8—0

ஸோல் ஏஜண்டுகள் :—

ஷா. கனிராம் ஜுக்ராஜ் கம்பெனி
தபால் பெட்டி நெ. 1266
மதராஸ்.

பரிசுதித்து நன்குணம் கண்டது

பரிசுதித்தால் விடமாட்டீர்கள்

A

இந்தியாவில் சிறந்தது என்று அனுபவசாலிகளால் மதிக்கப்படும்

ருக்மணி குக்கர்

என்னும் சமையல் அடுக்கு உங்கள் வீட்டில் இருக்கிறதா? இல்லாவிட்டால் இன்றே ஒன்றைத் தருவியுங்கள். இதனால் ஒரு மணி நேரத்தில் சாதத்துடன் பல பதார்த்தங்களை நீராவியினால் சிரமமில்லாமலும், சமையற்காரனுடைய உதவி இல்லாமலும் மிக்க குறைந்த சிலவில் தயார்செய்யக்கூடும்.

கனம் எட்டியாபுரம் ராஜா அவர்கள் எழுதுகிறார்:—மற்ற குக்கர்களைவிட ருக்மணி குக்கரே பூரண திருப்தியைக்கொடுக்கிறதென உறுதியாய்ச் சொல்லுகிறேன். இதில் சமைக்கப்படும் ஆகாரம் அதிக சத்துள்ளதாயும், தேகத்திற்கு ஆரோக்கியத்தை கொடுப்பதாயும் இருப்பதோடு மற்ற குக்கர்களில் காணப்படும் துர்வாசனை இல்லாததாயும் இருக்கிறது.

1, 2, 4, 6, 8, பேர்களுக்கு தகுதியான குக்கர்கள்
13, 18, 22, 27, 33, ரூபாய் விலை
ஒன்று இன்றே தருவியுங்கள்
விபர புஸ்தகம் இனாம். ஏஜண்டுகள் தேவை.

ருக்மணி குக்கர் கம்பெனி, ராயபுரம், (1) சென்னை.

எங்கும் புகழ்பெற்ற அசல்

யூகலிப்டஸ் ஆயில்

ஜலதோஷம், இருமல், கைகால் பிடிப்பு, பல்வலி, ரணம், தலைவலி, ஜுரம், இன்னும் அநேக தொத்து வியாதிகளைத் தீர்க்கும்.

	ரூ.	அ.
1. இரு முறை சுத்தி செய்யப்பட்ட 24 அவுன்ஸ் புட்டி 1-க்கு	2	8
2. ஷை சாதா	2	4
3. 1 அவுன்ஸ் புட்டி இரு முறை சுத்தி செய்யப்பட்டது.	0	6
4. 1 அவுன்ஸ் ரவுண்டு புட்டி (அழகான) பெட்டியுடன்	0	5
5. ஷை பெட்டியில்லாமல்	0	4
6. ½ அவுன்ஸ் (பெட்டியுடன்)	0	3

வியாபாரிகளுக்குப் பிரத்தியேக விலை:
எங்கும் ஏஜண்டுகள் தேவை

ஜி. கோதண்டபாணி அண்டு கோ,
திருவல்லிக்கேணி, சென்னை.

ஆங்கிலம் கற்றுக்கொள்ள விரும்பும அன்பர்களே!

நீங்கள் எளிதில் இங்கிலீஷ் பாஷையைக் கற்றுக்கொள்ள வேண்டுமானால்,

ஆனந்த ஆங்கில பாஷா போதினி

என்னும் நூலை உடனே வரவழைத்துப் படியுங்கள்.

இது 640–பக்கமுள்ள அழகிய முழுகாலிகோ பைண்டுள்ளது

விலை ரூபாய் **2**.

ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு **1—8—0** ..

தமிழ் தெரிந்தவர்கள் அதி சீக்கிரத்தில் ஆங்கிலம் கற்றுக்கொள்ளலாம்; ஆசிரியர் தேவையில்லை; பணச்செலவு அதிகமில்லை. இதற்கு முன் பல ஆங்கில போதினிகள் வெளி வந்திருப்பினும் அவை இதற்கிணையாகமாட்டா.

இது இங்கிலீஷ் பாஷையை எவர்க்கும் எளிதில் போதிக்கும் அரிய நூல். இதுவரை வெளிவராத நூதன பாட முறைகளுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. இதனைப் படிப்பவர் எந்த ஆசிரியருடைய உதவியுமின்றிச் சில தினங்களில் ஆங்கில பாஷையில் தேர்ச்சியடைந்து நன்ருகப் பேசவும், படிக்கவும், எழுதவும் தெரிந்துகொள்ளலாம். கிராம முனிசீப்களுக்கும், மணியக்காரர், கர்ணம் முதலிய கிராம உத்தியோகஸ்தர்களுக்கும், பட்லர்க்கும், சிலோன், பினங், சிங்கப்பூர் முதலிய இடங்களிலுள்ள தோட்டங்களின் கங்காணிமார்களுக்கும், இங்கிலீஷ் தெரிந்துகொள்ள விரும்பும் மற்ற எல்லோருக்கும் இது மிக்க அவசியமான புத்தகம்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

காலத்தைத் தமாஷாகக் கழிக்கவேண்டியவர்கள்

காலத்தின் கோலம்

என்ற புதிதாய் வெளிவந்த அருமையான நூலைப் படிக்க வேண்டுகிறோம். இது ஓர் விநோதமான கதையாக இருப்பதோடு விவேகத்தையும் உண்டுபண்ணக்கூடியதாக யிருக்கிறது. இதைப் போன்ற அரிய புஸ்தகத்தை உங்கள் ஜன்மத்திலேயே இதுவரையிலும் நீங்கள்படித்திருக்கமாட்டீர்கள். வேண்டுவோர் $4\frac{1}{2}$-அ.ஸ்டாம்பு அனுப்புக. எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வி. எஸ். கோபாலாச்சாரி.

69, மலையப்பெருமாள் தெரு, சென்னை.

ஜெகப் பிரசித்திபெற்ற

ஜிண்டான் மாத்திரையை

இன்றே பரீட்சியுங்கள்

அஜீர்ணம், சுரம், நாவரட்சி, தலைவலி, மயக்கம், மந்தம், சீதபேதி, கிராணி முதலிய சகல தோஷங்களையும் போக்கி உற்சாகத்தை யுண்டாக்குவதில் கை கண்டது.

15 pills	1 an.
40 pills	2 as.
65 pills with pill case	4 as.
100 pills (without)	4 as.
2c0 pills (with fancy pill case)	1 Re.
1000 pills (without)	2 Rs.

சோல் ஏஜண்டுகள் :— எஸ். வைத்தியா & கோ.,

நெ. 201, தேவராஜ முதலி தெரு, பி. டி. மதறாஸ் & திருச்சி.

ஆங்கில ஆசான்

அல்லது ஆங்கில போதினி

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய் தெரிந்து கொள்ளலாம்.

இது 7-ம் பதிப்பு 700-பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், மிகவும் முக்கியமானது.

முழு காலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூ. **2.** தபால் செலவு அணா **6.**

பினங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் புஸ்தகம் ரிஜிஸ்டர்செய்து அனுப்பப்படும்.

தி. இராஜகோபால் முதலியார்,

நெ. 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்

14 Ct. Rolled Gold Golden Wristlets

Price Rs. 8 0 0

14 காரட் பொன் கோல்டன் கைக்கெடியாரம்

(5-வருஷம் கியாரண்டி கொடுக்கப்படும்)

Small Size Pretty Shape



அழகான வடிவமுள்ள சிறிய சைஸ் இங்கிலீஷ் மோஸ்தர் ரிஸ்ட்லெட் கெடியாரம்

இக்கெடியாரத்தில் மணி காட்டும் டயலின் பேரில் பளபளப்பான (பொன்) தங்க நிறம் உள்ளது. இருபக்கமும் உள்ள வளையங்கள் இரண்டும் எப்பக்கமும் திருப்பக்கூடிய அழகிய அற்புதமான கீல் வளையங்களுள்ளது. இதன் பெருமை வாங்குகிறவர்களுக்குத் தான் தெரியும். கெடியாரம் வெகுகாலம் போகும்படி உயர்தர (ஸ்விஸ் மேக்கர்) சாமான்களால் செய்யப்பட்டது. சரியான காலமும் காட்டக்கூடியது. தங்க டயலும் பொன் கில்ட் விசித்திரப்பட்டைகள் தீர்த்த கீல் வளையமுள்ள ரிஸ்ட்லெட் கெடியாரம் 1-க்கு ரூ. 8 0 0
18-காரட் ரோல்டுகோல்ட் பாக்கெட் கெடியாரம் ரூ. 8 0 0
டைம்பீஸ் நன்ருய் உழைக்கக்கூடியது. ரூ. 5 0 0

F. M. S. ஆர்டர்கள் கெடியாரத்தின் கிரயமும் தபாற்கூலி ரூ. 1 8 0ம் சேர்த்து முன் பணம் அனுப்பவேண்டும்.

யூனியன் அண்டு கோ.,

தையப்ப முதலி தெரு, மதராஸ்.

---

24 தங்க மெடல்கள் பரிசு பெற்ற

பட்டணம் பொடி.

காரம், மணம், குணம், நிறம், வாடை கமழுகிறது.

N. V. ஷண்முகம் & கோ.,
போஸ்ட் பாக்ஸ் 555,
வண்ணாரப்பேட்டை போஸ்டு, மதராஸ்.

கேஸரியின்

லோத்ரா.

கர்ப்பாசய ரோக நிவாரிணி

இதன் உபயோகத்தால் குணம் கைக்கொண்ட பெண்மணிகள், இதை ஸ்திரீகளுக்கோர் வரப் பிரசாதினி என்றும் அதிசிரேஷ்டமான அவுஷத மென்றும், விலையில்லா ஆபரண மென்றும் சொல்லுகிறார்கள். ருதுசூலை, அகாலபஹிஷ்டி, ருது சிராவம் ஜாஸ்தி அல்லது குறைச்சலாய்ப் போவது, பஹிஷ்டை தடைபட்டுப் போவது, வெண் ரத்தப் போக்கு, கர்ப்பஸ்ராவம், அகாலப் பிரசவம், கருப்பை நழுகி விடுதல், கர்ப்பவிரணம், ருதுசூலையினால் வயிற்றில் உண்டாகும் கட்டி, மூர்ச்சை, சரீரம் பருத்தோ அல்லது மெலிந்தோ போவது, கணச்சூடு, சந்தான மில்லாமை, மலபத்தகம், இருமல், உப்பஸம், மேஹ ஜ்வரம் முதலிய சமஸ்த ரோகங்களும் இந்த லோத்ராவி னுபயோகத்தால் வெகு நம்பகமாய் நிவர்த்திக்கப்படும். இதன் விலை பெரிய புட்டி (12 அவுன்ஸ்) ரூ. 3–0–0

சிறிய புட்டி (6 அவுன்ஸ்) ரூ. 1–10–0

கேஸரி குடீரம், ஆயுர்வேத ஔஷதசாலை,

எழும்பூர், மதராஸ்.

A.

S.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை எடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்கு மேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 4 டிஜன் 1-க்கு ரூ. 2-4 டி சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 3 டிஜன் 1-க்கு ரூ. 2 டி சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மீத் சம்சுத்தீன் சாயபு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதராஸ்.

பவுன் நிறம் வாய்ந்த

பட்டணம் பொடி.

இப் பூவுலகெங்கெனும் புகழ் பெற்றோங்கியதும் தங்கமெடல், வெள்ளி மெடல், பரிசு பெற்றதும் ஸ்பெஷல் பொடிஎன மகுடம் புனைந்ததும், குணம் மணம், நிறம், வட்டை, காரம் இவ்வைந்தும் ஒருங்கே அமயப்பெற்றதும், தினசரி நற்சாக்ஷிப் பத்திரங்களால் கொண்டாடக் கூடியதுமான எமது பொடியை ஓர்முறை உபயோகித்து ஆனந்த மடையுங்கள். உங்கள் சிரசிலுள்ள துர் வியாதிகளை போக்கிக்கொள்ள விரும்புவீர்களாயின் இன்றே K. S. சுகந்த மூக்குத்தூளின் இருப்பிடத்தைக் கவனியுங்கள்.

K. சுல்தான் முஹையதீன் சாயபு
பட்டணம் பொடி தொழிற்சாலை,
தபாற்பெட்டி 260 நெ. 8 அப்பு மேஸ்திரி வீதி, சென்னை.

பெண் மலடென்ற பாவம் வேண்டாம் !

ஸ்திரீகளை மலடென்று ஒதுக்கிவிடாமல் அவர்களுக்கு மலட்டைப்போக்க வழி நம் வைத்திய நிபுணர் காட்டுவார். மூன்றே நாட்களில் தீரும். சில கேள்விகளடங்கிய பத்திரத்தை எம்மிடம்பெற்று பதில் எழுதியனுப்பினவுடன் சிகிச்சை ஆரம்பிக்கப்படும்.

தமிழ்நாடு ஆயுர்வேத வைத்தியசாலை, தபால்பெட்டி 278,
44, கோவிந்தப்ப நாயக்கன் தெரு. சென்னைப்பட்டணம்.

சிரிப்பு! ஓயாச் சிரிப்பு!!

எட்டுப் பிரதியைப் படித்த பலர் சிரித்து சிரித்து வயிறெல்லாம் புண்ணாய்ப் போய்விட்டதென்று சொல்லுகிறார்கள்!!!

முத்து மாமா

என்ற விகட விநோதக் கதையை நீங்கள் படிக்க நேர்ந்துவிட்டால் சாப்பிடும்போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போது கூட சிரிப்பீர்கள். இது ஓர் டாபர் மாமாவின் விநோதக் கதை. வேண்டுவோர் 4½-அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

வாஸன் புஸ்தக சாலை
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதறாஸ்.

ஒவ்வொரு
குடும்பத்திற்கும்
இன்றியமையாத
பொக்கிஷம்.

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

மின்சார ரசம்
கையிலிருந்து
விட்டால் வேறு
மருந்தே
தேவை இராது.

மின்சார ரசம்

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம்போன்றதென உலகப் பிரசித்தி பெற்றுள்ளது. மின்சார ரசம் செய்வதில் உபயோகப் படுத்தப் பட்டுள்ள சரக்குகளுக்கு இயற்கையாகவே ஒருவித மின்சார சக்தியுண்டு. இதில் பாஷாண சம்பந்தமான சரக்குகள் கிடையாது. பத்தியமில்லை. அனுபானமில்லை. உள்ளுக்கும் மேலுக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம்.

சகலவித ஜுரங்கள், தலைவலி, ஜலதோஷம், இருமல், அஜீரணம், புளியேப்பம், வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு, பல்வலி, பல்லரணை, வாய் நாற்றம், கைகால்பிடிப்பு, வாய்வு தொந்தரவுகள், வாத ரோகங்கள், காலரா, பிளேக், ஜன்னி, ஸ்திரீ ரோகங்கள் குழந்தை வியாதிகள் இவைகளுக்கு மின்சார ரசம் கைகண்ட மருந்தென்பது தினந்தோறும் ஆயிரக் கணக்காய் தேசமெங்கும் உபயோகித்து வருபவர்களின் அனுபவமாகும். உண்மை விளங்க ஒரே முறை பரீக்ஷியுங்கள்.

இன்றைக்கே எழுதுங்கள்! கேட்லாக்கு இனாம்!!
புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

எச்சரிக்கை: அசல் மின்சார ரசம் ஒன்றுக்கே மேற்கண்ட டிரேட்மார்க் உள்ளது.

விலாசம்:—

மின்சார ரசம் கம்பெனி லிமிடெட்,
சேலம் (S. I.)

F. M. S. க்கும் S. S. க்கும் சோல் ஏஜண்டுகள்,
மெஸர்ஸ்:

ஆர். இ. முகம்மது காசீம் & கோ,
கிளாங், பினாங், சிங்கப்பூர்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் சென்
2/0358

கம்பளிப் போர்வைகள்.

அசல் கம்பளி, மிருதுவானது. நீடித்து உழைக்கக் கூடியது. குளிருக்கு அடக்கமானது. சிவப்பு, பச்சை, மஞ்சள், ஊதா முதலிய பல கலர்களில் கிடைக்கும். 6 முழம் நீளம் 3 முழம் அகலமுள்ளது.

1	நெ.	விலை ரூ.	11	முதல்	15	வரை
2	,,	,,	10	,,	11	,,
3	,,	,,	8½	,,	10	,,

கம்பளிச் சட்டை

முறுக்கு கம்பளி நூலால் செய்யப்பட்டது. மிகவும் அழகாயிருக்கும் குளிருக்கு அடக்கமானது. இதை அணிந்துகொண்டால் நடுக்கம், சீதளம் அண்டாது. தோட்டங்களி லிருப்பவர்களுக்கு முக்கிய அவசியமானது.

கிரே கலர் சட்டை 1-க்கு ரூ. 4-8-0

உயர்ந்த வெள்ளை ,, ரூ. 12 முதல் 18 வரை.

TRAVELLING RUGS.

நயமான கம்பளி, நல்ல குளிரில்போர்த்துக்கொள்ள உதவும். கலர் கிரே, கறுப்பு, சிவப்பு.

5 மு. நீளம் 3 மு. அகலம் ரூ. 5.

கம்பளி ஆசனம்.

ஜெபம் செய்யும்போது ஆசாரமாய்ப் போட்டு உட்காரக் கூடியது.

விலை அணா 12, ரூ 1, 1½.

உயர்ந்தது ரூ. 3½ முதல் 5 வரை.

LADY'S SHAWL.

பெண் பிள்ளைகளுக்காக ஸ்பெஷலாய் தயாரித்தது. 5 முழம் நீளம் 2½ முழம் அகலமுள்ளது. அழகான கலர்களிலும் கிடைக்கும்.

போர்வை 1-க்கு விலை ரூபா 3.

மடிதாவளி

இது அசல் கம்பளியால் செய்யப்பட்டது. வைதீக பிராமணர்கள் ஸ்நானம் செய்ததும் மடியாகத் தரித்துக்கொள்ள உபயோகமுள்ளது.

5	முழம்	24	இஞ்சு	அக.	ரூ.	2
6	,,	24	,,	,,		2½
7	,,	29	,,	,,		3
8	,,	40	,,	,,		5½
10	முழம்	40	இஞ்சு	அக.	ரூ.	7
16	,,	40	,,	,,		12
18	,,	40	,,	,,		14

கே. எஸ். முத்தையா & கோ.

சில்க் ஹவுஸ் - - காசி.

குளிர்! குளிர்!! குளிர்!!!

தேகாரோக்யத்தை கவனியுங்கள்.

சுதேசி கம்பளி போர்வை

அசல் கம்பளி கரையில்லாதது. எல்லா கலர்களிலும் கிடைக்கும்

நெ. 1. 6மு × 3 வீ விலை ரூ. 10.
நெ. 2. ,, ,, 7.
நெ. 3. ,, ,, 6.

மேகவர்ணப் போர்வை.

ஜெர்மனியில்செய்த துணைஸான துணி, பலவிதமான கலர்களில் கிடைக்கும். ஒரே மாதந்தான் இதன் விலை.

நெ. 1.6மு × 3 வீ விலை ரூ. 14.
நெ. 2. ,, ,, 10

பாரிஸ் உல்லன் சால்வை.

அசல் உல்லன், அழகான பட்டினுல் பூவேலைகள் செய்யப் பட்டது. புதுமாதிரியான ரகம் எல்லாக் கலர்களிலும் கிடைக்கும்.

நெ. 1. 6 மு × 3வீ விலை ரூ. 16.
நெ. 2. ,, ,, 14.

உல்லன் மப்ளர்.

வாடைகளை போக்கடிக்கக் கூடியது. கழுத்தில் கட்டி காதை மறைத்துக் கொள்வது. காக்கி வெள்ளை முதலிய கலர்கள்.

5·மு 7 இஞ்சு விலை ரூ. 2-8-0.

ஜேர்மன் கம்பிக்கரை போர்வை.

பலவிதமான கலர்களில் கிடைக்கும். அழகான கம்பிக் கரை.

6 மு × 3 வீ. விலை ரூ. 10, 12.

உல்லன் ரக் (Rug)

உயர்ந்த கம்பளியால் செய்யப் பட்டது. நல்ல குளிரில் போர்த்துக் கொள்ள உதவும். கருப்பு, புளூ முதலிய கலர்கள்.

6மு × 3வீ. விலை ரூ. 12,14,18.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால் பெட்டி 99

சென்னை.

Printed by P. R. Rama Iyar & Co., Madras and Published by K. S. Sundarar.